இதழ்
100
01.10.2026
திருக்கேதீச்சரம் ஆவணப்பெட்டகம்
யாழ் நூல்
மகாகவி பாரதியார்
இலங்கை வேந்தன் எல்லாளன்
யாழ்ப்பாண வைபவமாலை
திருக்குறள்
தூமி
பல்சுவை மின்னிதழ்
100
நூறாவது மின்னிதழ்... நம் நெஞ்சின் நடைபாதையில்...
100 வது மின்னிதழ்
மொழியின் மடியில், மரபின் நடையில்
தூமி
100
வாசகர்களின் அன்புக்கு என்றென்றும் நன்றியுடையோம்!
பெரு வெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

ஆசிரியர்
ச.சந்தோஷன்

இணை ஆசிரியர்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

செய்தியியலாளர்
ச.மதுஷா

வடிவமைப்பாளர்
ர.அபிரா
வ. குணநீதன்

திறனாய்வாளர்
கு.கீர்த்தனன்

இவ்விதழில் துமித்தவை....

03 தலைமுறைக்கான பயணத்தில் மைல்கல் 100ஐ தொட்டுள்ளது 'துமி மின்னிதழ்'
06 இந்த நூறு – பெருங்கனவில் சிறு வெற்றி
11 வாசகர்களுக்கு ஓர் மடல்!
12 துமி பற்றிய பார்வைகள்....
16 புத்தக உலகம்
21 துமி பற்றிய பார்வைகள்....
25 வாசிப்பின் ருசி தரும் வாழ்வியல் மாற்றம்!
26 துமி பற்றிய பார்வைகள்....
34 மூளைக்காக வாசிக்கிற புத்தகங்கள்!
37 கால்பந்து வீரர்கள் வாசிக்கும் புத்தகங்களும் அவற்றை வாசிப்பதன் மூலம் நாம் கற்றுக்கொள்வதும்!

ஆசிரியர் பதிவு

தலைமுறைக்கான பயணத்தில் மைல்கல் 100ஐ தொட்டுள்ளது 'துமி' மின்னிதழ்!

துமி மின்னிதழ் இலக்கம் 100வது இதழை தொட்டுள்ளது. துமி மின்னிதழின் ஆசிரியராய் குழந்தை நிமிர்ந்து நடப்பது மகிழ்வை தருகின்றது. அதேவேளை இலக்கியங்கள் மீது காதல் கொண்டவனாய், துமி மின்னிதழின் பின்னணியில் ஓர் எழுத்தாளர் உலகம் மற்றும் வாசகர் வட்டம் நிலையாக பயணிக்கின்றது என்கையில் மட்டற்ற மகிழ்வை அளிக்கிறது. ஓர் மின்னிதழ் அதிலும் எவ்வித இலாப நோக்கற்ற அடிப்படையில் இயங்குகையிலும் 100 இதழ்கள் பயணித்துள்ளது என்கையில், அதன் பயணம் நிலையான எழுத்தாளர் உலகம் மற்றும் வாசகர் வட்டத்தின் ஒருங்கிணைப்பிலேயே சாத்தியமாகக் கூடியதாகும்.

100 வெறுமனவே இலக்கம் என்பதிலும் ஒரு மைல் கல்லே, முடிவில்லை அல்லது உச்சமில்லை என்பது தொடர்பிலும் 'துமி அமையம்' குழுவிடம் தெளிவான பார்வை உண்டு.

'துமி' என்ற பெயரிடலில் சிலர் எம் மீது அக்கறை கொண்டவர்கள், 'ஏன் நீங்களே உங்களை சிறுமைப்படுத்தி கொள்கிறீர்கள்?' என கேட்பதுண்டு. இது சிறுமை இல்லை. நாங்கள் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டும் என்ற இலக்கை தொடர்ச்சியாக உறுதி செய்கின்றது.

'துமி! பெருவெள்ளதிற்கான பயணம்.'

ஆக ஆயிரம், மில்லியன், பில்லியன் என இலக்கங்கள் கடக்கின்ற போதும், நாம் துமியாக பெரு வெள்ளத்திற்கான பயணத்தையே தொடர்வோம்.

தலைமுறைகளுக்கான துமியின் இலக்கும் பெரியது. 2016ஆம் ஆண்டு 'துமி அமையம்' தன்னார்வதொண்டு நிறுவனமாக ஆரம்பிக்கையில், வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கடத்துவதற்கு, 'வரலாற்றை காணொளியாக ஆவணபடுத்தல்' என்ற செயற்பாட்டை தீர்மானித்தோம். 2020ஆம் ஆண்டு 'துமி மின்னிதழை' ஆரம்பிக்கையில், 'அடுத்த தலைமுறை தனது தலைமுறைக்கு எழுத்தை, வாசிப்பை கொண்டு செல்ல களத்தை உருவாக்குவோம்' என்ற நோக்கத்தை தீர்மானித்தோம். ஆக இது தலைமுறைகளுக்கான பயணம் அது நீண்டது.

அண்மையில் மறைந்த பிரபல பட்டிமன்ற நடுவரும் தமிழறிஞருமான சாலமன் பாபையா அவர்கள், தனது இறுதி பட்டிமன்றத்தின் இறுதி பகுதியில் புதிய தலைமுறையான Gen-Z பற்றி உலகம் பார்க்க வேண்டிய பார்வையை எடுத்துரைத்திருந்தார்.

"அந்தப் பிள்ளைகளுடைய எதிர்காலம், அவர்களுடைய போக்கு, என்னைக் கேட்டால்... 'தம்மின் தம் மக்கள் அறிவுடைமை' என்னுடைய பிள்ளைகள் வந்து முட்டாள்களாக இருக்க மாட்டார்கள். அவர்கள் முட்டாள்களாக போய்விட்டார்கள் என்றால், என்னில் ஏதோ குறை இருக்கிறது என்று அர்த்தம்." எனக் குறிபிட்டிருந்தார்.

துமி, தனது அடுத்த தலைமுறைக்கு வழிகாட்ட அல்லது அடுத்த தலைமுறைக்கு களத்தை உருவாக்கி கொடுத்தல்

என்பதையே மைய கருவாக கொண்டு செயற்படுகின்றது. நாம் குறைபாடற்றவர்களென நம்புகிறோம். ஆக நம் அடுத்த தலைமுறையும் முட்டாள்கள் இல்லை. அவர்களுக்குரிய உலகை அவர்கள் உருவாக்குகிறார்கள். அதில் எம் வரலாற்றை எடுத்து சொல்வதாகவோ அல்லது அவர்கள் மொழியிலேயே அவர்களுக்கான வழிகாட்டலை வழங்குவதாகவோ தூமியின் செயற்பாடுகள் அமையப்பெற்று வந்துள்ளது. எதிர்காலங்களிலும் பெரியவர்கள் ஆசிகளாலும் இறை அருளாலும் தலைமுறைகளுக்கான பணி தொடரும் என நம்புகிறோம்.

முந்தைய தலைமுறையினர் இன்றைய தலைமுறையை வழிப்படுத்தினார்கள். எனினும் 70/80 களில் பிறந்தவர்கள் எங்களை போல் இவர்கள் இல்லை என 90களில் பிறந்தவர்களை குறை கூறுவது இயல்பு. எனினும் அது அவர்கள் உலகம் என காலப்போக்கில் இயல்பாகியது. வேகத்தையும் துரிதகதி செயற்பாடுகளையும் உருவாக்கியவர்கள் முன்னைய தலைமுறையினரே ஆகும்.

அதன் விளைவாகவே Gen-Z தலைமுறையின் போக்கும் அமைகிறது. எனவே எதிர்கால தலைமுறையை வெறுமனவே குறை சொல்லி நிந்தித்து செல்வதில் எந்த நன்மையும் உருவாகப் போவதில்லை. எதிர்கால தலைமுறையை வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு இன்றைய தலைமுறையினரிடம் காணப்படுகின்றது.

தூமி ஆவணப்படுத்தலிலும் மின்னிதழிலும் அதனையே செய்கின்றது. தனது மின்னிதழ் பயணத்தில் ‘100’ என்ற மைல்கல்லை கடக்கிறது. பெருவெள்ளத்திற்கான பயணம் நீண்டு செல்லும்!

சில பயணங்கள் சிந்தனையிலேயே முற்றுப்பெற்றுவிடுகின்றன. சில பயணங்கள் சிந்தனையைக் கடந்து செயல்வடிவம் பெறுகின்றன. செயல்வடிவம் பெற்ற பயணங்களில்கூட, சில விநாடிகளிலேயே முடிந்து விடுபவையும் உண்டு சில நிமிடங்களில் அலுத்துப்போனவையும் உண்டு சில மணித்தியாலங்களில் மங்கிப்போனவையும் உண்டு. சில பயணங்கள் சில நாட்கள் உயிர்ப்போடு இருக்கும் சில, சில மாதங்களில் மௌனித்துவிடும் இன்னும் சில, சில ஆண்டுகளோடு வறண்டு போய்விடும்.

எல்லாப் பயணங்களும் எதிர்பார்த்த தொலைவு வரை நீள்வதில்லை. எல்லாக் கனவுகளும் எதிர்பார்த்த வடிவில் மலர்வதில்லை.

பயணம் இலக்குடனேயே பிறக்கிறது. ஆனால், தொடங்கிய எல்லாப் பயணங்களும் தாம் குறித்த இலக்கைச் சென்றடைவதில்லை. சில பயணங்கள், பாதியில் இலக்கை மறந்ததால் திசையிழக்கின்றன. சில, இலக்கையே மாற்றிக்கொண்டதால் வழி தவறுகின்றன. இன்னும் சில, பாதையின் சிரமங்களைத் தாங்காது பாதியிலேயே நின்றுவிடுகின்றன.

ஆகவே, இலக்கே பயணத்தைத் தீர்மானிக்க வேண்டும் பயணம் இலக்கைத் தீர்மானிக்கக் கூடாது. இல்லையேல், காற்றடிக்கும் திசையெல்லாம் தன் திசையென எண்ணி ஆடும் காத்தாடியைப் போலவே பயணமும் ஆகிவிடும்.

அத்தகையதொரு காலத்தில், பொருளாதார இலாபத்தைச் சிறிதும் கருதாது, தம் இளமையையே தமிழுக்கான ஆகுதியாக்கி, சில இளைஞர்கள் கண்டெடுத்த சிறு தூமி இன்று ஒரு தசாப்தத்தைக் கடந்தும் தூமித்த வண்ணம் உள்ளது. அவர்கள் தூமித்த சிறு தூமியே இன்று இந்த மின்னிதழாக, நூறாவது இதழின் வாசற்படியில் நின்றுகொண்டிருக்கிறது.

இலங்கையின் மண்ணில் எத்தனையோ சஞ்சிகைகள் பிறந்திருக்கலாம் காலத்தின் வெவ்வேறு கரைகளில் எத்தனையோ இதழ்கள் மலர்ந்திருக்கலாம். ஆனால் நூறு இதழ்களைத் தாண்டி தம் பயணத்தைத் தொடரும் சஞ்சிகைகள் மிகச் சிலவே.

வாசிப்பு வழக்கம் வற்றிக்கொண்டிருக்கும் இக்காலத்தில், நீண்ட பாரம்பரியம் கொண்ட பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் ஒன்றன்பின் ஒன்றாக மூடுவிழா காணும் இந்த வறட்சிக் காலத்தில், இளையோர் ஏந்திய இந்த எழுத்தாயுதம் இன்னும் போராடிக்கொண்டிருப்பது புதுமைதான். ஆனால், தமிழுக்கு இது புதுமையல்ல. தமிழ் வாழ்ந்த காலமெல்லாம் எழுத்தும் போராடியே வந்திருக்கிறது.

ஒரு தூமி சிறியது. ஆனால் தூமிகள் சேர்ந்தால் பெருங்கடல் பிறக்கிறது. அப்படித்தான் ஒரு சிறு எண்ணம், ஒரு சிறு முயற்சி, ஒரு சிறு குழு, ஒரு சிறு எழுத்துப் பயணம் – காலத்தின் கரையில் இன்று நூறு இதழ்களாகத் தடம் பதித்திருக்கிறது.

தூமியின் முதல் இதழின் முகப்பில் ஒரு குழந்தை இருந்தது. இன்று நூறாவது இதழைக் கடந்தும், தாம் இன்னும் அந்தத் தூமியைப் போலவே – வளர்ந்து பெரிதாகிவிட்டோம் என்று கர்வப்படாமல், தூமியளவே ஆன குழந்தை மனத்தோடு இருப்பதைச் சொல்லும் வகையில், மீண்டும் ஒரு குழந்தையை முகப்பில் கொண்டுவந்திருக்கிறார்கள்.

அந்தக் குழந்தையின் கைகளில் தூமியின் முதலாவது மின்னிதழ். மறுகையில் நூறாவது மைல்கல்.

ஒரு கையில் கடந்த காலம்
மறுகையில் எதிர்காலம்.
ஒரு கண்ணில் நினைவு
மறு கண்ணில் நம்பிக்கை.

தாம் கடந்த பாதையை மறக்கவில்லை என்பதையும், பழமையைப் புறந்தள்ளாமல் புதுமையைத் தழுவிச் செல்கிறார்கள் என்பதையும் அந்தக் காட்சி மௌனமாகப் பேசுகிறது.

அதுவும் போதாதென்று, ஓர் அறையில் இன்னொரு குழந்தை அந்தக் காட்சியை கணனித் திரையில் பார்த்துக்கொண்டிருக்கிறது. தூமியின் பயணம் ஓர் அச்சுப்பக்கத்தில் முடங்கியதல்ல் அது காலத்தோடு நகர்ந்து, திரைகளைக் கடந்து, இலத்திரனியல் உலகிற்குள் நுழைந்திருக்கிறது என்பதையும் அந்தக் காட்சி சொல்லாமல் சொல்கிறது.

பழமையைப் பறைசாற்றும் குறியீடாக, நம் பண்டைய வரலாற்றில் செய்திகளைச் சுமந்து சென்ற தூதுப் புறாவை நினைவூட்டும் வகையில், மேசையின் மீது ஒரு புறாவும் இடம்பெற்றிருக்கிறது.

அதன் காலில் கட்டப்பட்டிருக்கும் ஓலைச் செய்தி, தூமிக்கும் அதன் வாசகர்களுக்குமான அன்பையும் நன்றியையும் சுமந்து வருகிறது.

காலம் மாறிவிட்டது
தூதன் மாறிவிட்டான்
தகவல் செல்லும் பாதை மாறிவிட்டது

ஆனால், வாசகருக்கும் எழுத்துக்கும் இடையிலான அன்பு மட்டும் மாறவில்லை.

நூறைக் கடந்த வெற்றியின் அடையாளமாக கேடயம் கொண்டாட்டத்தின் குறியீடாகச் சாளரத்துக்கு அப்பால் வெடிக்கும் வாணவேடிக்கைகள் பகலவன் மறைந்த இரவிலும் அறியாமை இருளை இறையருளின் ஒளியால் அகற்றும் குறியீடாக ஒளிரும் கோபுர விளக்குகள் – இவ்வாறு அந்த அட்டைப்படத்தின் ஒவ்வொரு கூறும் ஒரு கதை சொல்கிறது.

அது வெறும் படம் அல்ல.
படிமங்களால் எழுதப்பட்ட ஒரு பனுவல்.

சங்க காலம் தொட்டு சமகாலம் வரை, மண்ணையும் மக்களையும் மையமாகக் கொண்டு வெளிவந்த நூல்களின் சில முகங்களையும் அந்த அட்டைப்படம் தன்னகத்தே சுமக்கிறது.

அதன் வழியே, துமி என்பது வெறுமனே காலத்தின் கண்ணாடி அல்ல காலம் கடந்து மீண்டும் வாசிக்கவும், ஆராயவும், தேடவும் கூடிய ஓர் ஆவணப் பெட்டகம் என்பதையும் உணர்த்துகிறது.

அதோடு நின்றுவிடவில்லை. எழுதுகோலை ஆயுதமாக்கி ஓர் ஏகாதிபத்தியத்தையே எதிர்த்த எட்டயபுரத்தின் எரிமலை – மகாகவி பாரதியைத் தம் முன்னோடியாகக் கொண்டு இந்தப் பயணம் தொடர்கிறது என்பதைச் சொல்லும் வகையில், அந்த கவிச்சிங்கத்தின் சிலையும் பனுவல்களோடு அங்கே இடம்பெற்றிருக்கிறது.

சங்க காலச் செய்யுளொன்றைப் போல, இந்தச் சிறப்புமிகு நூறாவது இதழின் அட்டைப்படத்திற்கும் ஆயிரம் பொருள்களைப் பொழிப்புரையாகவும் நயப்புரையாகவும் எழுதிக்கொண்டே இருக்கலாம்.

அத்தனை குறியீடுகளையும் ஒரே காட்சிக்குள் பொதிந்து, சமகாலத் தொழில்நுட்பத்தின் துணையோடு ஓர் அட்டைப்படமாக உருவாக்கியிருப்பதன் மூலம், வேர் பழமையில் இருந்தாலும், சிறகுகள் புதுமையை நோக்கி விரிகின்றன என்பதையும் துமி மறைபொருளாகச் சொல்லியிருக்கிறது.

நூறு என்பது இங்கே ஒரு முடிவல்ல.

அது ஒரு மைல்கல்.
ஒரு நினைவுக்கல்.
ஒரு நன்றிக்கல்.
அதற்கும் மேலாக, இன்னும் நீண்டுசெல்ல வேண்டிய பாதையில் வைக்கப்பட்ட ஒரு சிறு ஓய்வுக்கல்.

இந்த நூறு – பெருங்கனவில் ஒரு சிறு வெற்றி மட்டுமே.

ஏனெனில், துமியின் கனவு நூற்றில் முடிவதல்ல.
நூறு கடந்தும் தமிழோடு நடப்பது.
எழுத்தோடு பயணிப்பது.
வாசிப்பை உயிர்ப்பிப்பது.
புதிய தலைமுறையின் கைகளில் தமிழை ஒப்படைப்பது.

சோர்வின்றி வாசிக்கும் வாசகர்கள் இருக்கும் வரை,
தளர்வின்றி எழுதும் எழுத்தாளர்கள் இருக்கும் வரை,
துமியின் இந்த இலக்கியப் பயணத்திற்கும் முடிவில்லை.

ஒரு துமி இன்னொரு துமியைப் பிறப்பிக்கட்டும்.
ஒரு எழுத்து இன்னொரு எழுத்தை எழுப்பட்டும்.
ஒரு வாசகர் இன்னொரு வாசகரை உருவாக்கட்டும்.
ஒரு தலைமுறை அடுத்த தலைமுறைக்கு தமிழைத் தாங்கிக் கொடுக்கட்டும்.

நூறாவது மைல்கல்லைத் தொட்ட இந்தச் சிறு துமி, இன்னும் பல நூறு மைல்களைத் தாண்டி, தமிழின் வானில் தன் சிறகுகளை விரிக்கட்டும்.

அதற்குத் துணையாக இயற்கையும் இறையும் இருக்கட்டும்.

துமியின் பயணம் தொடரட்டும்.
தமிழின் பயணம் தொடரட்டும்.

வாசகர்களுக்கு ஓர் மடல்!

கனவுகள் பெரியது, ஆரம்பம் எளிமையானது என்பதாகவே 'துமி மின்னிதழ்' தொடக்கம் அமைகிறது. 2020களில் கோவிட்-19 தொற்று பொது முடக்க காலப்பகுதியில், பொது முடக்கத்தை பயனுடையதாக்க துமி அமையத்தால் நம் சமூகத்துக்கு என்ன செய்யலாம் என்ற சிந்தனையின் செயல் வடிவமே துமி மின்னிதழ் உருவாக்கம்.

ஆரம்பத்தில் மாதத்துக்கு இரண்டு என்பதாகவே துமி மின்னிதழ் வாசகர்களிடையே துமித்தது. பின்னாளில் துமி நண்பர்களுக்கு ஏற்பட்ட அதிகரித்த வேலைப்பளுக்களால் மாதத்துக்கு ஒன்றாக துமிக்க தொடங்கியது. எவ்வித இலாப நோக்கமும் இல்லாத போதிலும் துமி சார்ந்து ஓர் இளைய எழுத்தாளர் குழுவின் உருவாக்கம் மற்றும் வாசகர் வட்டத்தின் ஆர்வத்தாலும் மாதத்தின் 01 ஆம் திகதி எவ்வாறாயினும் துமியை வாசகர்களிடம் கொண்டு சேர்த்திட துமி ஆசிரியர் குழுமத்தின் அனைவரின் பங்களிப்பும் முதன்மையானதாகும்.

துமி மின்னிதழின் வாசகர்களின் ஆர்வங்கள் அறிய கிடைக்கையில் பெரும் உவகை அடைந்துள்ளோம். அதுவே எம்மை உந்தி கடந்த ஆறு ஆண்டுகளாய் 100 இதழ்களாய் பயணிக்க வைத்துள்ளது. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த கல்லூரி அதிபர் துமி மின்னிதழை பாடசாலை மாணவர்களுக்கு ஸ்மார்ட் வகுப்பறையில் பிரசுரித்திருந்தார். நாம் யாருக்கு துமி மின்னிதழின் பயன் சென்றடைய வேண்டும் என விரும்பினமோ?, அக்களத்தில் அதிபர் தன்னார்வமாக துமி மின்னிதழை காட்சிப்படுத்திய செய்தி எமக்கான பெரும் அங்கீகாரமாக மகிழ்ச்சியடைந்தோம். அவ்வாறே இளையவர் நாம், எம் முதல் தலைமுறையினர் பலரை பார்த்து வியந்துள்ளோம். எம் பயணங்களின் பின்னணியில் அவர்களின் தாக்கமும் ஆழமாக காணப்படும். அத்தகைய பெரியவர்கள் துமி மின்னிதழின் ஆக்கங்கள் குறித்து உரையாடுகையில் பெரியதொரு நிறைவை மனம் பெற்றுள்ளது.

ஆக துமி மின்னிதழின் பயணம் ஏதோ ஒரு வடிவில், இதன் வாசகர்களாய் காட்டும் ஆர்வத்தின் துலங்களே 'துமி மின்னிதழ்-100'. அது தான் இதனை வாசகர்களுக்கான சிறப்பு சமர்ப்பணம் செய்கிறோம்.

நம் மண்ணில் துலங்கும் துமி

செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு திருமுருகன்
தலைவர், சிவபூமி அறக்கட்டளை.
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

நல்லதோர் சஞ்சிகையாகத் தொடர்ந்து வெளிவரும் துமியின் நூறாவது மலர் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தம் அடைகிறேன்.

துமி மின்னிதழ் வெளிவந்தபோது அதனை வெளியிட்டு ஆசீர்வதிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. நேற்றுப் போல் இருக்கிறது. துமி தன் ஒப்பற்ற பணியை ஓயாமல், நூறாவது மலரை வெளியிடுவதையிட்டு ஆச்சரியப்படுகிறேன்.

ஆன்மீகம், அரசியல், இலக்கியம், விளையாட்டு எனப் பல்துறைகளையும் உள்வாங்கி எளிய சமுதாயத்திற்கு விருந்தளிக்கும் சஞ்சிகையாகத் துமி பரிணமித்திருக்கிறது. துமியில் வந்த விடயங்கள் அற்புதமானவை. அறிதற்கு அரிதானவை. தேடித் தேடிப் பல நல்ல விடயங்களைத் துமி காலத்திற்குக்காலம் தந்தது.

எம் மண்ணில் சாதனையாளர்களைத் துமி இனங்கண்டு வெளிப்படுத்தியது. உலக அரங்கில் இளைய தலைமுறையின் ஆற்றலை எம் பிள்ளைகள் அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தியது. ஒலிம்பிக் முதல் உள்ளூர் விளையாட்டுக்கள் வரை ஒழுங்காகச் செய்திகளைத் தந்து உற்சாகப்படுத்தியது.

சிறுவர்களுக்குப் பொருத்தமான கதை, இளையவர்களுக்குப் பொருத்தமான அறிவுரை, சிந்தனைச் சிதறல்கள், நல்ல கட்டுரைகள் எனத் துமி மாதா மாதம் படைத்துக் கொண்டிருக்கின்றது.

துமியின் துல்லியமான பணி சிறக்க உழைத்த சந்தோஷன், மகாசேனன் மற்றும் நூலாசிரியர் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் அனைவருக்கும் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் கூறி, துமி தொடர்ந்து நம் மண்ணில் துலங்க வேண்டும் என வேண்டி அமைகிறேன்.

நிறைவைத் தந்த தூமி

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
எழுத்தாளர்

நூறு, நிறைவை நிறைக்கும் சொல். நூறாவது இதழ். தூமியின் நூறாவது இதழா? சின்னஞ்சிறு இறகுகள் கீதமிசைக்க, அந்த நாள் வந்து மனதிற்குள் அமர்கிறது. அன்றும் வழமை போல் இறை வழிபாட்டிற்கு மலர்களைக் கொய்வதற்காக காலைப் பொழுதிலேயே பூஞ்செடிகளை அண்மித்தேன். அந்த வேளை மேலேயிருந்து ஒரு தூமி என் மீது விழவே, "மழைத்தூமியோ?" என ஐயத்துடன் நிமிர்ந்து பார்த்தேன். தேன் சுமந்து செல்லும் தேனீ கண்ணில் பட்டது. சின்னஞ்சிறு தேனீ, ஆசையோ பேராசை, சிரித்துக்கொண்டேன்.

தூமி பற்றிய பார்வைகள்

நாட்கள் விரைந்தன. தேனீக்களின் தொகையும் அதிகரிக்க, மலர்களின் உள்ளுறைந்த தேனின் சுவையறிந்து, வகையறிந்து தேடிச் சேர்த்த மருத்துவ சக்தி கொண்ட தேனைத் தேடி வந்தோர் அதன் புகழ் பாடினர். நூறாவது இதழ் கண்ட தூமி நூறாண்டுகள் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

சிதைந்த சூழலில் ஒரு நம்பிக்கை ‘தூமி’க்கான பாராட்டும் நன்றியும்!

செல்லக்கண்டு சிவசீலன்
நிறை வேற்று அதிகாரி
குறோளி தமிழ்க் கல்விக் கூடம்
ஐக்கிய இராச்சியம்.

"சிறுதுளி பெருவெள்ளம்" என்பதற்கேற்ப, மழைத்துளி தொடங்குவதை "தூமி" என்பார்கள். தூமியாகத் தொடங்கிப் பொழிந்துதான் பின்னர் பெருமழையாக மாறுகிறது. அவ்வாறு சிறு தூமியாகத் தொடங்கிய நமது ‘தூமி’, இன்றைக்குப் பெருமழையாக உருவெடுத்துள்ளது.

தூமி பற்றிய பார்வைகள்

நாம் சிதைந்து போயிருக்கக்கூடிய இந்த அரசியல், சமூக, பொருளாதாரச் சூழ்நிலையில், மிக ஆக்கபூர்வமான கட்டுரைகளையும் தேடல்களையும் உருவாக்கி அவற்றைச் சமூகத்திற்குக் கொண்டு செல்வதில் இது பெரும்பங்காற்றி இருக்கிறது. இதைத் தொடர்ந்து முன்னெடுப்போம். இதற்காகப் பங்களித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியும் பாராட்டும்.

தூமி மின்னிதழின் 100-வது இதழ் வெளியீடு: இளைஞர்களின் கலைப் படைப்புகளுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்!

இலக்கியச் சுடர் த.இராமலிங்கம்
(தமிழ்நாடு)

தூமி மின்னிதழின் 100-வது இதழ் வெளிவர இருப்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். நம்முடைய இளைஞர்கள் மிக ஆர்வமாக ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையில் இந்த இதழை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பல இதழ்களைப் படித்துப் பார்க்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. அதிலே கவிதைகள், கட்டுரைகள், கதைகள், ஓவியங்கள், வரலாற்றுப் பதிவுகள், நிகழ்ச்சித் தொகுப்புகள் என்று பலவற்றை நம்முடைய இளைஞர்கள் தொகுத்து மிக அழகாக வழங்கி வருகிறார்கள். தங்களுடைய இயல்பான பணிகளுக்கு இடையே இப்படி ஒரு பதிவினைக் கொண்டு வர வேண்டும் என்று எண்ணி, தொடர்ந்து அதை நடத்தி வரக்கூடிய நம்முடைய இளைஞர்களை நான் மனமுவந்து பாராட்டுகிறேன்.

தூமி பற்றிய பார்வைகள்

உங்களுடைய முயற்சி மென்மேலும் தொடர்ந்து இந்த இதழ் வெளிவருவதற்கும், இன்னும் இதைச் சிறப்பாக வெளியிடுவதற்கான வழிமுறைகளைச் சிந்தித்து, அப்படி ஒரு மிகச்சிறந்த இதழாக இது வருவதற்குரிய முயற்சிகளைத் தொடர்ந்து நீங்கள் எடுக்க வேண்டும் என்றும் உங்களை வாழ்த்துகிறேன். உங்களுடைய முயற்சி இந்த 100-வது மின்னிதழில் மிக அழகாக வெளிப்படுகிறது. அதற்கு என்னுடைய அன்பான வாழ்த்துகள்.

தொடர்ந்து உங்களுடைய முயற்சி வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

நூறாவது தடத்தில் 'துமி'
வாசிப்புலகில் ஒரு வெற்றிகரமான பயணம்!

செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன்
முதல்வர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
யாழ்ப்பாணம்.

பல்சுவை மின்னிதழாக வெளிவரும் துமி 100 ஆவது இதழில் கால்பதிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். கொவிட் பெருந்தொற்று ஏற்படுத்திய நன்மைகளுள் துமியின் வரவும் ஒன்றாகும். பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் இருந்த இளையோரிடம் வாசிப்புப் பழக்கத்தை கொண்டு சேர்த்ததில் துமி மின்னிதழுக்கும் அதனோடு இணைந்த துமி முகநூல் பக்கத்திற்கும் பங்கு இருக்கின்றது. ஆற்றல் மிக்க மூன்று இளைஞர்களின் கூட்டிணைவாகவும் துமி அமைகின்றது. ஜீவா சஜீவன், மகாசேனன் சந்தோசன் என மூன்று ஆற்றலாளர்கள் துமி ஊடாக தங்கள் இணைவையும் புனைவையும் வெளிக்கொணர்ந்தனர். வரலாறு சார்ந்த செய்திகள் விளையாட்டு சார்ந்த செய்திகள் கல்விசார்ந்த செய்திகள் என பல்துறை சார்ந்த விடயங்கள் துமியின் உள்ளடக்கமாகவுள்ளன.

பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர்வது தற்போதைய சூழலில் மிகவும் சவாலான விடயம். இதில் இலாபநோக்கு இம்மியளவும் இருக்க முடியாது. மனத் திருப்தி ஒன்றே மாமருந்தாக அமைய முடியும். இதனால் ஐந்து வருடங்களில் நூறு இதழ்கள் என்ற பெருங்கனவு சாத்தியமாகின்றது. காண்பிய ஊடகங்களின் பெருக்கம் வாசிப்புத் தளத்தை முடக்கும் அளவுக்கு வளர்ந்து செல்கின்றது.

இந்நிலையில் துமி தனக்கென ஓர் தடயம் பதித்து உயர்ந்து நிற்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. நூறாவது இதழாக மலரும் துமியின் வருகைக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவிப்பதுடன் அதன் தொடர்ச்சியான பயணத்திற்கும் இறையருள் கைகூடப் பிரார்த்திக்கின்றேன்.

எழுத்தாளர் கி. ராஜநாராயணன் அவர்களின் சிறுகதை சார்ந்த உரை வடிவம்

வாசகனின் வாழ்வு

“புத்தகம் படிப்பவன் குடும்பத்தால் வெறுக்கப்படுபவனாகத்தான் இருப்பான். ஒருவன் புத்தகங்களை நேசிப்பதை குடும்பம் ஒருபோதும் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்வதில்லை.”

வாசிப்பாளனின் இயல்பும் குடும்பச் சூழலும்

புத்தகம் படிக்கிற ஒருவனைப் பற்றிய ஒரு கதை இது. புத்தகம் படிக்கக்கூடிய ஒருவன் எப்படி இருப்பான்? அவன் பெரும்பாலும் தனது சொந்த வீட்டிலேயே குடும்பத்தினரால் வெறுக்கப்படக்கூடியவனாகவே இருப்பான்.

அந்த புத்தகம் படிப்பவனை அவனுடைய குடும்பம் ஒருபோதும் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்வதில்லை. அவனுடைய பிள்ளைகளுக்கும் அவனைப் பிடிக்காது மனைவிக்கும் அவனோடு இணக்கம் இருக்காது. இன்னும் சொல்லப்போனால், ஊரில் இருப்பவர்களும் வீதியில் இருப்பவர்களும் இவனைப் பார்த்து “இவன் எப்பவும் கையில் ஒரு புஸ்தகத்தை வைத்துக்கொண்டே இருப்பான், இவனெல்லாம் ஒரு மாதிரி” என்று விசித்திரமாகப் பேசுவார்கள்.

வேங்கடம் என்ற புத்தகப் பிரியர்
அப்படித் தீவிரமாகப் புத்தகம் படிக்கக்கூடிய மனிதர்களில் “வேங்கடம்“ என்ற ஒரு விசித்திரமான மனிதர் இருந்தார். வேங்கடம் தானாகக் காசு கொடுத்துப் புத்தகம் வாங்குபவர் அல்ல் மற்றவர்களிடம் பேசி, அவர்களிடமிருந்து புத்தகத்தைப் பறித்துக் கொள்பவர். அவர் உங்களைச் சந்தித்தால், அடுத்த ஐந்து நிமிடங்களிலேயே பேச்சுக் கொடுப்பார்:

“தி. ஜானகிராமன் கதைகள் படிச்சிருக்கீங்களா? ஜானகிராமனுடைய இந்தக் கதையைப் படித்திருக்கிறீர்களா? எப்பேர்ப்பட்ட எழுத்து தெரியுமா!“ என்று பேசிக்கொண்டே வந்து, “உங்களிடம் அந்தப் புத்தகம் இருந்தால் கொடுங்கள், படித்துவிட்டுத் தருகிறேன்“ என்று வாங்குவார். வாங்கித் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றுவிடுவார்.

எல்லோரிடமும் இலக்கியம், எழுத்து, கவிதை, கதைகள் பற்றிப் பேசிப் பேசியே, அவர்களின் மனதில் புத்தகங்களின் மீது ஆசையை உருவாக்குவார் பின் அவர்கள் வைத்திருக்கும் புத்தகங்களை எடுத்துச் சென்று தன் வீட்டில் வைத்துப் படிப்பார். ஆனால், படித்துவிட்டுப் புத்தகங்களைத் திருப்பிக் கொடுக்கவே மாட்டார்.

புத்தகச் சேகரிப்பும் விவசாய வாழ்க்கையும்
அவர் அடிப்படையில் ஒரு விவசாயி புத்தகம் வாங்கக்கூடிய வசதி அவரிடம் இல்லை. ஆனால் நல்ல புத்தகங்கள் அனைத்தையும் சேகரித்துத் தன் வீட்டில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற பேராவல் அவருக்குள் இருந்தது.

புத்தகத்தைப் பறிகொடுத்த நண்பர்கள் மற்றவர்களிடம், “அவருக்கு இரவல் மட்டும் புத்தகம் கொடுத்துவிடாதீர்கள், திருப்பித் தரவே மாட்டார் அவரிடமிருந்து புத்தகத்தை மீட்கவே முடியாது” என்று கூறுவார்கள். புத்தகத்தை மீட்க யாராவது தேடி வந்துவிடுவார்களோ என்பதற்காகவே அவர் தன் சொந்த ஊரைக் கூட மாற்றி மாற்றித் திரிவார்.

கி.ரா அவர்கள் வேங்கடத்தைப் பற்றி மிக அழகிய ஒரு சித்திரத்தை எழுதுகிறார்: வீதியில் அவரைப் பார்க்கும்போது, ஒரு குழந்தையைத் தன் மடியில் பாசத்தோடு தூக்கிச் செல்வது போல, கனமான புத்தகங்களைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு செல்வாராம்!

நூலகத் தொடர்பும் சோகச் செய்தியும்
அவர் எங்கிருந்து வருகிறார், யார் என்றே தெரியாதபோதும், அவருக்கு ஊர் நூலகத்தோடு மட்டும் மிக நெருங்கிய நட்பு இருந்தது. நூலகத்திற்குச் செல்வார், நூலகரிடம் பேசுவார்.

நூலகத்திலிருந்தும் புத்தகங்களை இரவல் வாங்கிச் சென்று திருப்பிக் கொடுக்காமல் வைத்துக் கொள்வார். ஆனாலும் நூலகருக்கு அவர் ஒரு நல்ல நண்பராக விளங்கினார்.

ஒருநாள் மக்கள் அனைவரும் நூலகரிடம் சென்று, “அவர் எல்லோர் புத்தகத்தையும் எடுத்துக்கொண்டு போய்த் தர மாட்டேன்கிறார் அவரைப் பார்த்து எப்படியாவது புத்தகங்களை மீட்க வேண்டும்' என்று முறையிட்டனர். அதற்கு நூலகர் கண்கலங்கி, “இனி மீட்க முடியாது... சில நாட்களுக்கு முன்புதான் வேங்கடம் இறந்து போய்விட்டார்” என்றார்.

“கடந்த வாரம் கூட அவரைப் பார்த்தோமே, என்ன நடந்தது?” என்று கேட்டதற்கு, “வீட்டில் ஒரு சின்ன சச்சரவு, சண்டை நடந்தது. அதில்தான் அவர் இறந்து விட்டார்” என்று விபரம் கூறினார். உண்மையைத் தெரிந்துகொள்ளவும் துக்கம் விசாரிக்கவும் அக்கறை கொண்ட நான்கு ஐந்து நண்பர்கள் ஒன்றிணைந்து, கடம்பூருக்குப் பக்கத்தில் உள்ள அவரது சொந்தக் கிராமத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

குடும்பப் புறக்கணிப்பும் துயர மரணமும்
கிராமத்தில் விசாரித்தபோது ஊர்க்காரர்கள் கூறினார்கள்: “அந்தப் புஸ்தகம் படிப்பான்ல, அந்த வேங்கடமா? அவன்தான் செத்துட்டானே ஐயா... எப்பவும் புத்தகம் புத்தகம்னு படிச்சுட்டே இருப்பான். வீட்டில் ஏதாவது வேலை செய்யச் சொன்னாலும் படிச்சிட்டுச் செய்யறேம்மா என்பான். அது அவனது மகனுக்கும் மனைவிக்கும் சுத்தமாகப் பிடிக்காது.”

மரணத்தின் பின்னணி: ஒருநாள் வீட்டில் சாவி காணாமல் போய்விட்டது. அனைவரும் சாவியைத் தேடிக்கொண்டிருந்தபோது, வேங்கடம் ஏதோ ஒரு புத்தகத்தை ஆசையோடு படித்துக் கொண்டிருந்தார். “நான்தான் படிச்சிட்டு இருக்கேன்ல, நீங்களே தேடுங்க” என்று அவர் சொன்னதும் மனைவிக்குக் கடும் கோபம் வந்தது.

தன் மகனிடம் “நீ தேடு” என்றதும், மகன் சாவியைத் தேடுவதாகச் சொல்லி, வேங்கடம் வாழ்நாள் முழுக்கச் சேகரித்து வைத்திருந்த அத்தனை புத்தகங்களையும் தரையில் வாரி வீசி எறிந்தான். “இந்தக் குப்பைக்குள்ளாடி கிடந்தாதான் உண்டு” என்று இழிவாகக் கூறினான்.

வாழ்நாளில் எதற்குமே கலங்காத வேங்கடம், தன் கண்முன்னே தான் நேசித்த புத்தகங்கள் அவமதிக்கப்படுவதையும், குப்பை என்று தன் மகனே தூக்கி எறிவதையும் பார்த்துத் தன்னை மறந்து மகனை அடிக்கக் கையை ஓங்கினார். அதற்கு மகன், “இந்தப் புஸ்தகத்தைப் படிச்சதுமில்லாம என்னை அடிக்கக் கை ஓங்குறியா? நான் அடிச்சேன்னா நீ தாங்கமாட்ட” என்று அவரைத் தள்ளிவிட்டான்.

நிலைதடுமாறிக் கீழே விழுந்ததில் பிடரியில் பலத்த அடிபட்டு வேங்கடம் அதே இடத்தில் பரிதாபமாக உயிரிழந்தார்.

புத்தகங்களுடன் எரிக்கப்பட்ட வாழ்க்கை

விசாரிக்கச் சென்றவர்கள், “அவர் அவ்வளவு கஷ்டப்பட்டுச் சேகரித்து வைத்த புத்தகங்களையெல்லாம் எங்கே? அதை நூலகத்திற்காவது கொடுத்திருக்கலாமே?” என்று கேட்டனர். அதற்கு ஊர்க்காரர்கள் சொன்ன பதில் அவர்களின் இதயத்தையே உலுக்கியது: “எல்லாப் புத்தகங்களையும் வேங்கடத்தோடு சேர்த்தே வைத்து எரித்துவிட்டோம்!” மகன் இறந்த தந்தையின் உடலை மயானத்திற்கு எடுத்துச் சென்று, சந்தனக் கட்டைகளை அடுக்கி வைப்பது போல, வேங்கடம் தன் வாழ்நாளெல்லாம் வாசித்து நேசித்த அத்தனை புத்தகங்களையும் அவர் உடலின் மீது அடுக்கி வைத்து, அவரோடு சேர்த்தே தீயிட்டுக் கொளுத்திவிட்டான்.

ஊர்க்காரர் ஒருவர் கூறினார்: “இவன் சிறுவயதாக இருக்கும்போதே அவனுடைய தந்தை, விவசாயம் பார்க்காமல் புஸ்தகம் படிச்சுட்டு இப்படித் திரிகிறாயே, ஒருநாளைக்கு உன்னை அந்தப் புஸ்தகத்தோட வச்சுத்தான் கொளுத்தப் போறாங்க பாரு என்று திட்டியிருந்தார். அதேபோலவே நடந்துவிட்டது ஐயா.”

பண்பாட்டின் மீதான சிந்தனை

ஒரு மனிதன் தன் வாழ்நாளெல்லாம் படித்த புத்தகங்களாலேயே எரிக்கப்படுகிறான் என்ற காட்சி நெஞ்சை விட்டு அகலாதது. இது ஒரு மனிதனின் புத்தகப் பித்து பற்றியது மட்டுமல்ல் புத்தகம்

படிப்பவனை, அறிவை நேசிப்பவனை இந்தச் சமூகம் எப்படி நடத்துகிறது என்பதற்கான சான்று. அவன் குடிகாரனாகவோ, தீய செயல்கள் செய்பவனாகவோ, குற்றங்கள் செய்து சிறை சென்று வந்தவனாகவோ இருந்தால்கூட இந்தச் சமூகம் சகித்துக்கொண்டிருக்கும், மன்னித்து வாழ்க்கை கொடுத்திருக்கும். ஆனால், தன்னை மேம்படுத்திக்கொள்ளவும், உலகை உள்வாங்கவும் புத்தகங்களை நேசித்த மனிதனை அவனது குடும்பமும் சமூகமும் குப்பையெனக் கருதி அவனோடு சேர்த்தே கொளுத்தியிருக்கிறது என்றால், உண்மையிலேயே அது நம் பண்பாடே வெட்கப்பட வேண்டிய ஒன்று.

(பின் குறிப்பு: எழுத்தாளர் கி. ராஜநாராயணனின் புகழ்பெற்ற “புத்தக உலகம்” சிறுகதையை அடிப்படையாகக் கொண்ட எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களின் உரைக் காணொளி பேஸ்புக் தளத்திலிருந்து பெறப்பட்டு வரி வடிவமாக உருவாக்கப்பட்டுள்ளது.)



வரலாறு வாழ்த்தும் !

எஸ். ஜெகதீசன்
பத்திரிகையாளர்
முன்னாள் பிரதம ஆசிரியர்,பொதிகை,கனடா

ஒரு சிறு ‘துமி’ என, ஒரு சிறு தீவிலிருந்து ஈரம் கசிந்த ஒரு சிற்றிதழ், இன்று பெருமழை எனப் பொழிந்து பெரும் பெரும் நாடுகளிலெல்லாம் அறிவுப்பயிரைச் செழிப்புடன் ஓங்கி வளரச் செய்துகொண்டிருக்கிறது.

பக்கபலமான எந்தப் பின்னணியும் இன்றி, இத்தனை பிரம்மாண்டமான இலக்கியச் சாதனையை சாத்தியமாக்கியதன் ஒரே காரணி — இதன் திறமைமிகு ஆசிரியர் சந்தோஷன் என்றால் அது மிகையாகாது. அவரது அத்தாட்சிமிக்க உழைப்பும், தளராத இலக்கிய ஆர்வமுமே இச்சிற்றிதழை இத்தனை உன்னத நிலைக்கு உயர்த்தியிருக்கின்றது.

துமி பற்றிய பார்வைகள்

ஒரு இதழின் ஆசிரியர் என்பவர் வெறுமனே படைப்புகளைத் தேர்ந்தெடுப்பவர் அல்லர். அவர் ஒரு சிந்தனைச் சூழலை உருவாக்குபவர் புதிய குரல்களுக்கு இடம் கொடுப்பவர் வாசகர்களின் ரசனையை உயர்த்துபவர் காலத்தின் பதிவுகளைச் சேகரித்து அடுத்த தலைமுறைக்குக் கையளிப்பவர் என்பது பொது விதி. கூடவே அழகையும் ஆழத்தையும் சேர்த்த அவரது சகாக்கள்: இணை ஆசிரியர்கள் மகாசேனன் மற்றும் விநோதன்,வடிவமைப்பாளர்கள் அபிரா மற்றும் குணநீதன்,செய்தியாளர் மதுஷா, திறனாய்வாளர் கீர்த்தனன் ஆகியோரின் ஒவ்வொரு இதழையும் செம்மைப்படுத்திய பணி அளப்பரியது என்பதைக் கூட எந்த மேகமூட்டத்தாலும் மறைக்க முடியாது.

கடந்த 2020-ஆம் ஆண்டு, ஐந்தாம் மாதத்தில் “துமி” யின் முதலாவது சாரல் பெரு வெள்ளத்துக்கான கட்டியம் கூறியது. எடுத்த எடுப்பிலேயே வாசகர்களின் இதயங்களை நனைத்தது. பக்கத்துக்கு பக்கம் சிலிர்க்க வைத்தது. அதே ஈரலிப்போடும் அதே பசுமையோடும் இன்று தன் 100-வது இதழைத் தொட்டு நிற்கிறது என்பதைக் காணும்போது மனதிற்குள் பேருவகை பொங்கிப் பிராவாகின்றது. சிற்றிதழ் உலகில் நூறாவது இதழைக் காண்பது என்பது சாதாரண விஷயமன்று அது அர்ப்பணிப்பின் பெரு வெற்றி!

ஒரு சிற்றிதழின் உண்மையான வெற்றி அதன் பக்கங்களின் எண்ணிக்கையிலோ, அச்சுப் பிரதிகளின் எண்ணிக்கையிலோ மட்டும் அளக்கப்படுவதில்லை. அது எத்தனை மனங்களைத் தொட்டது, எத்தனை சிந்தனைகளைத் தூண்டியது, எத்தனை புதிய எழுத்தாளர்களுக்கு வாய்ப்பளித்தது, எத்தனை வாசகர்களின் அறிவுப் பயணத்துக்குத் துணைநின்றது என்பதில்தான் அதன் மகத்துவம் இருக்கிறது. அந்த அளவுகோலில் 'தூமி' தனது நூறாவது படியைப் பெருமையுடன் எட்டியுள்ளது.

தமிழ்க் கூறும் நல்லுலகிற்குத் தொடர்ந்து சுவையான அறிவு விருந்தையும் படைப்புலகப் புத்துணர்வையும் வழங்கி, 'தூமி' மேலும் நீண்டு செழித்து வளர என் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூறு இதழ்கள் கடந்த தூமி வாசிப்பின் தொடரும் பயணம்

கஜீபா இலங்கநாதன்

துமியின் நூறாவது இதழினை வாசகர்களோடு கொண்டாடுகின்ற தன்மை என்பது உண்மையில் வாழ்த்துதலுக்கு உரியது. இன்றைய நூலக பயன்பாடுகள் மற்றும் புத்தக வாசிப்புகள் மிகவும் மந்தமாக செல்லுகின்ற இத் துரித காலகட்டத்தில் துமி போன்றதான மின் இதழ்களின் தேவைப்பாடு இன்றியமையாத ஒன்றாகும். அந்த வகையில் துமியின் ஒவ்வொரு இதழும் அற்புதமான படைப்புக்களாக இணையத்தில் வெளிவருவதனை வாசித்து உணர்ந்து கொள்ள முடிகின்றது. அத்துடன் இலகுவாக துமி இதழ்களினை பார்வையிட முடிவது சிறப்புக்குரியதாகும்.

துமி மின்னிதழ் தன் படைப்பாக்கங்களை இன்னமும் பல நூற்று ஆண்டுகள் தொடர துமியின் வாசகி என்ற பெயரில் எனது மன பூர்வமான பாராட்டுகளும் நன்றிகளும் உரித்தாகட்டும்.

நூறாவது இதழை எட்டிய துமிக்கு வாழ்த்துக்கள்!

ரதீஸ்வரன் அபிரா

ஒரு இதழின் பயணம் என்பது வெறுமனவே பக்கங்கள் நிரம்பிய பயணம் அல்ல அது ஒரு சமூகத்தின் சிந்தனைகளையும் உணர்வுகளையும் காலத்தின் பதிவுகளையும் தன்னகத்தே சுமந்து செல்லும் ஓர் அழகிய பயணம்!

அந்த வகையில் பல்வேறு சிந்தனைகளையும் கருத்துகளையும் களம் அமைத்து சமூகத்தின் பல்வேறு விடயங்களை வாசகர்களிடம் கொண்டு சேர்த்து வந்த துமி இன்று தனது 100வது இதழை வெளியிடும் இந்த சிறப்பான தருணத்தை எட்டியிருப்பது மகிழ்ச்சியையும் பெருமையையும் அளிக்கிறது.

ஒவ்வொரு இதழும் ஒவ்வொரு காலத்தின் பதிவாகவும் ஒவ்வொரு படைப்பும் ஒரு சிந்தனையின் வெளிப்பாடாகவும் அமைந்து வாசகர்களுடன் துமி ஏற்படுத்திருக்கும் இந்த பயணம் சிறப்பானது.

துமி பற்றிய பார்வைகள்

நூறாவது இதழ் என்பது ஒரு இலக்கை அடைந்ததன் அடையாளம் மட்டுமல்ல இன்னும் பல புதிய பயணங்களுக்கான தொடக்கமும் கூட

துமி தொடர்ந்து புதிய சிந்தனைகளுக்கு களம் அமைத்து பல்வேறு குரல்களுக்கு இடம் அளித்து சமூகத்துடன் இணைந்து தனது பயணத்தை தொடர வேண்டும்.

இன்னும் பல நூறு இதழ்களை நோக்கி புதிய சிந்தனைகளுடன் புதிய படைப்புகளுடனும் துமியின் பயணம் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

துளியாய் இணைந்து வெளிச்சம் பாய்ச்சும் 'துமி'

கனிஸ்ரா ஜெயகாந்தன்

தற்காலத்தில் இளைஞர் சமூகத்தில் வாசிப்புப்பழக்கம் குறைந்து வருகின்றது என குற்றம் சுமத்துவோர் மத்தியில், அதிமாக மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களிடம் இருந்து கனமான ஆக்கங்கள், கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரை துமிமின்னிதழில் சுமந்து வெளிவருகின்றமை அவதானிக்க முடிகின்றது. இது இளைஞர்களின் வாசிப்பு, தேடல், ஆய்ப்பரப்பை வெளியுலகிற்கு எடுத்துச் செல்லும் இப்பெரிய களமாக அமைகின்றது.

துமி மின்னிதழின் ஊடாக வெளிவரும் ஒவ்வொரு கட்டுரைகளும் காலத்தின் தேவைகருதி மிகக் கச்சிதமாக அமைந்திருக்கின்றன. சமூகத்திற்கு தேவையான கருத்துக்களை சொல்ல இது நல்ல தளமாக செயற்படுகின்றது.

என்னுடைய தனிப்பட்ட ரீதியான ஆவல்யாதெனின், தொடர்ச்சியாக துமி மாதமின்னிதழிற்கு கட்டுரை எழுதுகின்றவர்களுக்கு வருட இறுதியில் யாதேனும் ஒரு ஒன்றுகூடல் நிகழ்வுகள், நினைவுப்பரிசில்கள் வழங்கினால் அவை எழுத்தாளர்களுக்கு ஒரு அங்கிகாரமாகவும் கௌரமாகவும் அமைவதுடன், இன்னும் பலரை துமி மின்னிதழுடன் எழுத்தாளர்களாக இணைப்பதற்கு அது சிறந்த வாய்ப்பாகவும் அமையும் என எண்ணுகின்றேன்.

துமி

துமியாய் விழுந்த மழைத்துளி
மண்ணின் தாகம் தீர்ப்பதுபோல்
துமியாய் பறந்த தூசிகள்
சூரிய ஒளியில் மின்னுவது
போல்

துமியாய்
தொடங்கிய கனவுகள்
மலையாய் உயர்ந்து
நிற்பதுபோல்
துமியாய் சேர்ந்த முயற்சிகள்
வெற்றிகளாக மாறுவது போல்-
துமி மின்னிதழ்
அறியாமை இருள் நீக்கி
அண்டம் அறியும்
அறிவொளி தருகின்றது
ஒரு துமி அன்பு போதும்
உலகை மாற்றிட
ஒவ்வொரு துமியும் போதும்
அறிவை பாய்ச்சிட

துமி பற்றிய பார்வைகள்

சிறியதாய் தொடங்கிய
ஒவ்வொரு முயற்சிகளும்
பெரிய வரலாற்றின்
முதல் படியாக மாறுவதுபோல்

துமி மின்னிதழ்
நூறு அல்ல
பல ஆயிரங்கள்
வரை துமிக்க மனதார
வாழ்த்துகின்றேன்.

வாசிப்பின் ருசி தரும் வாழ்வியல் மாற்றம்!

தென்னிந்திய திரைப்பட இயக்குனர் மாரி செல்வராஜ் அவர்கள், வாசிப்பு தன்னை எந்தளவு பதப்படுத்தியது என விபரித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது "கோபப்படும்போது கூட நீங்க சொல் பிரயோகம் இருக்குல்ல, மனைவியைத் திட்டினாலும் சரி, அண்ணனைத் திட்டினாலும் சரி, தம்பியைத் திட்டினாலும் சரி, அப்பாகிட்ட பேசினாலும் சரி, யார்கிட்ட வாக்குவாதம் பண்ணாலும் சரி, எப்படியாப்பட்ட வார்த்தைகளை நாம யூஸ் (Use) பண்ணனும் அப்படிங்கிறதெல்லாம் வாசிப்பு சொல்லிக் கொடுக்கும்.

அந்த ருசி எப்ப தட்டுதோ உங்களுக்கு, நீங்க நினைக்கலாம் வாசிக்கிறது ஒரு வேலை மாதிரி நினைக்கலாம். வாசிக்கிறது ஒரு கடலை சாப்பிடுற மாதிரி, வாசிக்கிறது ஒரு பாட்டு கேட்கிற மாதிரி, வாசிக்கிறது ஒரு வாக்கிங் (walking) போற மாதிரி. வாசிக்கிறதுங்கிறது, நீங்க எப்பெல்லாம் உங்களுக்கு ஏதாவது பண்ணனுமேன்னு தோணும்ல, அது மாதிரி ஒரு அனிச்சை செயலா இருந்துச்சுன்னா, உங்களை அறியாமலேயே உங்களுக்குள்ள ஒரு மாற்றம் நடக்கும். நீங்க வாசிக்க வாசிக்க, நீங்க என்னத்த வேணாலும் வாசிங்க, எதையாவது எடுத்து வாசிங்க. நீங்க வாசிக்கும்போது உங்க பேச்சு மாறும். அந்த மொழியில் உள்ள அத்தனை வார்த்தைகளையும் கத்துக்கிறது வந்து, உங்களை எவ்வளவுக்கு உயரமா மாற்றும் அப்படிங்கிறது நீங்க வாசிக்க வாசிக்கத்தான் உங்களுக்குப் புரியும்.

ஜெர்மன் அறிஞர் வந்து தோண்டி எடுத்து, தமிழ்நாட்டோட பாரம்பரியம் பெருமைகளைக் காட்டுன ஊர்ல, சாதாரணமா ஆடு மேய்ச்சுகிட்டு அந்த வெயில்ல சுத்திக்கிட்டு இருந்த ஒரு பையன், அங்க கிடந்த பேப்பரெல்லாம் எடுத்து வாசிக்க ஆரம்பிச்சேன். வாசிக்க ஆரம்பிக்க ஆரம்பிக்கத்தான் அந்த வாசிப்போட ருசி தென்படும். அந்த வாசிப்பு வந்ததுக்கு அப்புறம்தான், நீங்க இருக்கிற இடத்துல இருந்துகிட்டு உங்களால நீங்க சென்றடையாத இடத்தைப் பத்தி கனவுகளைக் காண முடியும்." எனக்குறிப்பிட்டுள்ளார்.

துமி இன் தமிழ் பயணம் மெம்மேலும் தொடர வேண்டும்!

கிஷோர்தனா சிவானந்தா
மட்டக்களப்பு

கடந்த ஆறுவருட காலமாக அயராது உழைத்து, 100 வது மின்னிதழை பிரசுரித்து, தனது முதலாவது சதத்தை அடித்து, வெற்றிகரமாக திகழப்போகிற எமது “துமி” இதழிற்கு, ஒரு இளம் எழுத்தாளராகவும் வாசகியாகவும், என்னுடைய மனப்பூர்வமான வாழ்த்துக்கள்!

“துமி” இன் தமிழ் பயணம் மெம்மேலும் தொடர வேண்டும்!

ஒவ்வொரு ஆக்கங்களையும் பெற்று, பதிலளித்து, சரி-பிழை பார்த்து, அவற்றை இறுதியாக தெரிவுசெய்து, மாதத்திற்கொரு முறை தவறாமல் பிரசுரிப்பது என்பது விளையாட்டல்ல. அது தொழில் தர்மத்தையும், “துமி” இதழிற்காக உழைக்கிற அனைவருடைய விடாமுயற்சியையும் காட்டுகிறது. “சிறு துளி பெரு வெள்ளம” என்று நாம் அனைவரும் அறிவோம், அது போலத்தான் துமியாக தொடங்கிய இவ்விதழ், இன்று தமிழ் ஆறாக பாய்வதை காண்கையில், அதன் வாசகர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியாக இருக்குமென்பதில் ஐயமில்லை. இதே மகிழ்ச்சியுடன் ஒரு சின்ன மீம் நகைச்சுவையும்!

‘துமி’ எழுத்துப்பயணத்தின் இனிய துணைவன்!

நடராசா கோபிராம்
உளவியல்சிறப்புக்கலைமாணவன்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

ஒரு படைப்பாளியின் எழுத்துப் பயணத்தில், அவனது எண்ணங்களுக்கும் கனவுகளுக்கும் இடமளிக்கும் ஒரு தளம் கிடைப்பது என்பது மிகப்பெரிய வாய்ப்பு. அந்த வகையில், கடந்த ஆறு ஆண்டுகளாக துமி மின்னிதழுடன் எழுத்தாளரா-கவும் வாசகராகவும் இணைந்து பயணிப்பது எனது இலக்கியப் பயணத்தில் மறக்க முடியாத அனுபவமாக அமைந்துள்ளது.

கவிதைகள், கட்டுரைகள் என எனது பல்வேறு படைப்புகளை துமியின் வாயிலாக வாசகர்களிடம் கொண்டு செல்ல முடிந்தமை எனக்கு பெரும் மகிழ்ச்சியையும், தொடர்ந்து எழுத வேண்டும் என்ற ஊக்கத்தையும் வழங்கியுள்ளது. நான் எழுதிய ஒவ்வொரு படைப்பும் வாசகர்களைச் சென்றடையும் போது, இன்னும் சிறப்பாக எழுத வேண்டும் என்ற பொறுப்புணர்வும் எனக்குள் உருவாகியுள்ளது. எனது எழுத்துகளுக்கு இடமளித்து, அவற்றை வாசகர்களிடம் கொண்டு சேர்த்த துமி மின்னிதழ் குழுவினருக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எழுத வேண்டும் என்ற எண்ணம் பலருக்கும் இருக்கும். ஆனால் அந்த எண்ணத்தை எழுத்தாக மாற்றி, அதனை வாசகர்களிடம் கொண்டு செல்வதற்கான வாய்ப்பு அனைவருக்கும் எளிதில் கிடைப்பதில்லை. அந்த வாய்ப்பை துமி எனக்கு மட்டுமல்லாது பல படைப்பாளிகளுக்கும் தொடர்ந்து வழங்கிவருகின்றது.

ஒரு படைப்பை வெளியிடுவது மட்டுமல்லாமல், படைப்பாளியின் சிந்தனைகளுக்கு மதிப்பளித்து அவற்றை சமூகத்திடம் கொண்டு சேர்ப்பதன் மூலம் துமி ஒரு முக்கியமான இலக்கியப் பணியை முன்னெடுத்து வருகின்றது.

இன்று துமி தனது 100வது இதழை நோக்கி நகர்கின்றமை உண்மையிலேயே பாராட்டுக்குரிய ஒரு மைல்கல். நூறு இதழ்கள் என்பது வெறும் எண்ணிக்கை அல்ல. அதன் பின்னால் நூற்றுக்கணக்கான படைப்பாளிகளின் எண்ணங்களும், வாசகர்களின் ஆதரவும், ஆசிரியர் குழுவின் தொடர்ச்சியான உழைப்பும் அர்ப்பணிப்பும் உள்ளன. எனவே, இந்த நூறாவது இதழ் துமியின் பயணத்தில் ஒரு முக்கியமான வரலாற்றுப் பதிவாக அமையும்.

அதேவேளை, எதிர்கால துமியைப் பற்றிய எனது சில எதிர்பார்ப்புகளையும் இங்கு பகிர விரும்புகிறேன். முதன்மையாக, துமி மின்னிதழாகத் தொடர்ந்து இயங்குவதுடன், அதில் வெளிவரும் சிறந்த கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், ஆய்வுகள் மற்றும் ஏனைய படைப்புகளைத் தொகுத்து அச்சு வடிவிலும் வெளியிடும் முயற்சிகளை முன்னெடுத்தால் மிகவும் சிறப்பாக இருக்கும் என நினைக்கிறேன். மின்னுலகில் வாசிக்கப்பட்ட படைப்புகள் அச்சில் பதிவாகும்போது, அவை காலத்தைக் கடந்து பாதுகாக்கப்படும் இலக்கிய ஆவணங்களாக மாறும். அதேவேளை, படைப்பாளிகளுக்கும் அது ஒரு தனித்துவமான அங்கீகாரமாக அமையும்.

குறிப்பாக, நூறாவது இதழை ஒரு முக்கியமான திருப்புமுனையாகக் கொண்டு, துமியில் இதுவரை வெளிவந்த சிறந்த படைப்புகளைத் தொகுத்து ஒரு சிறப்பு அச்சு வெளியீட்டை உருவாக்குவது மிகவும் அர்த்தமுள்ளதாக இருக்கும். இது துமியின் நூறு இதழ் பயணத்தையும் பதிவு செய்யும் அதே நேரத்தில் அதனுடன் பயணித்த படைப்பாளிகளின் பங்களிப்புகளையும் நிலைநிறுத்தும்.

அடுத்ததாக, துமி சார்பில் இலக்கியப்போட்டிகளைத் தொடர்ந்து நடத்துவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என எதிர்பார்க்கிறேன். கவிதை, சிறுகதை, கட்டுரை, ஓவியம், புகைப்படம் போன்ற பல்வேறு படைப்புத் துறைகளில் போட்டிகளை ஏற்பாடு செய்வதன் மூலம் புதிய படைப்பாளிகளை அடையாளம் காணவும், குறிப்பாக இளைஞர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கவும் முடியும்.

போட்டிகளில் வெற்றி பெறும் படைப்புகளை துமியில் வெளியிடுவதுடன், சிறந்த படைப்புகளைத் தொகுத்து அச்சுவடிவில் வெளியிட்டால், அது படைப்பாளிகளுக்கு இன்னும் பெரிய ஊக்கமாக அமையும்.

மேலும், வாசகர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் இடையிலான தொடர்பை மேலும் வலுப்படுத்துவது துமியின் எதிர்கால வளர்ச்சிக்கு முக்கியமானதாக இருக்கும். வாசகர் கருத்துகள், படைப்பாளர் அறிமுகங்கள், படைப்புகள் மீதான விமர்சனங்கள், கலந்துரையாடல்கள் போன்றவற்றுக்கு அதிக இடமளித்தால், துமி ஒரு மின்னிதழாக மட்டும் இல்லாமல், வாசிப்பையும் படைப்பையும் வளர்க்கும் உயிரோட்டமான இலக்கியக்களமாகமாறும்.

கடந்த ஆறு ஆண்டுகளில் நான் 03 ஆண்டுகளுக்கு மேலாக (2023லிருந்து) துமியுடன் இணைந்து பயணித்த ஒவ்வொரு தருணமும் எனது எழுத்துப் பயணத்தில் ஒரு அனுபவமாகவும், கற்றலாகவும் அமைந்துள்ளது. எனது கவிதைகளுக்கும் கட்டுரைகளுக்கும் இடமளித்து, எனது சிந்தனைகளை வாசகர்களிடம் கொண்டு சென்ற துமிக்கு மீண்டும் ஒருமுறை எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

துமியின் 100வது இதழ் ஒரு நிறைவு அல்ல அது இன்னும் பல புதிய முயற்சிகளுக்கான தொடக்கமாக அமைய வேண்டும். மின்னுலகில் பிறக்கும் எழுத்துகள் அச்சில் நிலைக்கும் வரலாறாகவும், புதிய படைப்பாளிகள் உருவாகும் களமாகவும், வாசகர்களையும் படைப்பாளிகளையும் இணைக்கும் பாலமாகவும் துமி தொடர்ந்து வளர வேண்டும் என்பதே எனது மனமார்ந்த எதிர்பார்ப்பு.

துமி – எழுத்துப் பயணத்தின் இனிய துணைவனாக என்றும் தொடரட்டும்!

‘தூமி’
என் எழுத்துப் பயணத்தின் முதல் படி!

யோகராஜா பவ்யா
3ம் வருட மாணவி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

என் எழுத்துப் பயணத்தில் மறக்க முடியாத ஒரு பெயர் என்றால் அது “தூமி” நான் முதன்முதலில் எழுதிய கட்டுரை வெளிவந்த இதழும் தூமிதான். அந்த முதல் கட்டுரை எனக்குள் ஒரு புதிய நம்பிக்கையை விதைத்தது – “என்னாலும் எழுத முடியும” என்ற நம்பிக்கையை. ஒரு படைப்பில் முதன்முறையாக என் பெயர் இடம்பெற்ற அந்தத் தருணம் எனக்கு அளித்த மகிழ்ச்சியை வார்த்தைகளால் முழுமையாக விவரிக்க முடியாது. அதன்பின்னர் ஒவ்வொரு முறையும் தூமியில் என்னுடைய பெயர் இடம்பெறும் போதும் என்னுள் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் ஏற்படும்.

அந்த மகிழ்ச்சியே மீண்டும் மீண்டும் எழுத வேண்டும், என் படைப்புகளை தூமிக்கு அனுப்ப வேண்டும் என்ற ஆர்வத்தையும் தூண்டியது.எழுதுவதில் ஏற்படும் சிறிய பிழைகளைச் சுட்டிக்காட்டி அவற்றைச் சரிசெய்ய வழிகாட்டியதோடு, என்னுடைய முயற்சிகளை ஊக்கப்படுத்தியதும் தூமியே. ஒரு எழுத்தாளராக என்னை வளர்த்தெடுப்பதில் தூமியின் பங்களிப்பு எனக்கு மிகவும் முக்கியமானது. குறிப்பாக, “நானும் எழுத முடியும்” என்ற தன்னம்பிக்கையை எனக்குள் உருவாக்கிய பெருமை தூமிக்கே உரியது.இன்று தூமியின் 100வது இதழில் என்னுடைய கருத்தும் இடம்பெற வேண்டும் என்று நினைத்துப் பார்க்கும்போது, அது எனக்கு அளிக்கும் மகிழ்ச்சி அளவிட முடியாதது.

எனது எழுத்துப் பயணத்தின் முதல் படியாக இருந்த தூமியின் நூறாவது இதழில் என் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்வது எனக்கு மிகவும் சிறப்பான தருணமாகும். என்னைப் போன்ற இன்னும் பலரின் திறமைகளை வெளிக்கொணர்ந்து, அவர்களுக்குள் இருக்கும் எழுத்தாற்றலைத் தட்டி எழுப்பி, “என்னாலும் முடியும்” என்ற தன்னம்பிக்கையை உருவாக்கும் ஒரு சிறந்த தளமாக தூமி தொடர்ந்து விளங்கும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு.

தூமியின் 100வது இதழை எட்டியிருப்பது ஒரு சாதாரண எண்ணிக்கை அல்ல பல எழுத்தாளர்களின் கனவுகளுக்கும், முயற்சிகளுக்கும், தன்னம்பிக்கைக்கும் சாட்சியாக நிற்கும் ஒரு மைல்கல். என் எழுத்துப் பயணத்திற்கு நம்பிக்கையையும், ஊக்கத்தையும், வாய்ப்பையும் வழங்கிய தூமிக்கு என் மனமார்ந்த நன்றிகள். மேலும் பல நூறு இதழ்களைத் தாண்டி, இன்னும் பல புதிய எழுத்தாளர்களை உருவாக்கி, அவர்களின் திறமைகளுக்கு சிறகுகள் கொடுக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன். தூமியின் 100வது இதழுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களும் நன்றிகளும்! தூமியின் பயணம் என்றும் தொடரட்டும்... பல புதிய எழுத்தாளர்களின் பயணத்திற்கு அது முதல் படியாக அமையட்டும்!

மனதை வெளுக்கும் சோப் எது?

~கவிஞர் மு. மேத்தா உரை~

சிறந்த புத்தகங்கள் என்பவை நல்ல மனிதர்களை உருவாக்குகின்றன.

நீ அதை யோசிக்கணும்.

கற்றவன்கிறது, ஒரு நல்ல புத்தகத்தை ஒருத்தன் படிச்சான் என்று சொல்லிச் சொன்னால், அது அவனுடைய மனத்தை மென்மைப்படுத்துகிறது் மேன்மைப்படுத்துகிறது.

அப்ப மனத்துக்கு சலவை செய்வதற்கு ஏதாவது சோப்பு உண்டா? பாரதி சொல்றான்:

“துணி வெளுக்கச் மண்ணுண்டு எங்கள் முத்து மாரியம்மா எங்கள் முத்து மாரி,

மனம் வெளுக்க வழியில்லையே எங்கள் முத்து மாரியம்மா எங்கள் முத்து மாரி

மனத்தை வெளுக்கணும், சலவை பண்ணனும்னா எந்த ரின் சோப்பு போட்டா போகுமா மனத்தினுடைய அழுக்கு?

மனத்தினுடைய அழுக்குகளைப் போக்குவது புத்தகங்கள் தான்.

தூமி மின்னிதழின் 100வது சிறப்பு இதழ் வெளியீட்டுக்கு வாழ்த்தும் நன்றியும்

சீதாராமன் அபிலாசனி
3ம் வருடம் புவியியல் சிறப்பு கலை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அன்புள்ள ஆசிரியர் குழுவிற்கும், மின்னிதழ் நிர்வாகத்தினருக்கும் வணக்கம்.

மாணவர்களினதும், இளம் எழுத்தாளர்களினதும் படைப்பாற்றலுக்குப் பெருங்களமாக விளங்கும் உங்களது தூமி மின்னிதழ், வெற்றிகரமாக 100-வது பதிப்பைக் காண்பது அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த சிறப்புமிக்க தருணத்தில் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகிறேன்.

மாதந்தோறும் எங்களைப் போன்ற மாணவர்கள் மற்றும் பலரது சிந்தனைகளுக்கும், கட்டுரைகளுக்கும் வடிகாலாக அமைந்து, அவற்றை அழகான மின்னிதழாக உருவாக்கி உலகெங்கும் கொண்டு சேர்க்கும் உங்களின் பணி மிகவும் மகத்தானது. படைப்பாளர்களை ஊக்குவிக்கும் தளம்: வளரும் எழுத்தாளர்களின் திறமையை அடையாளம் கண்டு, அவர்களுக்குத் தொடர்ந்து களமமைத்துக் கொடுப்பது உங்களது மின்னிதழின் மிகப்பெரிய சிறப்பு.

தமிழ் மொழிப் பணி நவீன டிஜிட்டல் சூழலிலும் தமிழ் மொழியின் பெருமையையும், வாசிப்புப் பழக்கத்தையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் உங்களது முயற்சி பாராட்டுக்குரியது. ஒவ்வொரு மாதமும் எனது கட்டுரைகளை ஏற்றுக்கொண்டு, ஊக்கமளித்து வரும் ஆசிரியர் குழுவிற்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகள். உங்களது இந்தத் தமிழ் சேவை இன்னும் பல நூறு இதழ்களைக் கடந்து சாதனைகள் படைக்க வாழ்த்துகிறேன்.

அபயம்
இரகசியம் பேணும்
இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை
071 071 2345
மனநெருக்கீடுகளில்
இருப்பவர்களுக்கு உடனடி தொலைபேசி
வைத்திய ஆலோசனை வழங்கும் சேவை
துறை சார் மருத்துவர்களும் ,
குழுவினரும் உங்களை ஆறுதல் படுத்தி
தீர்வு காண்பதற்கு / வழிகாட்டுவதற்கு
தயாராக உள்ளனர் .
ஒரு நாளில் (24 மணி நேர இரவு பகல் சேவை)
எந்தநேரமும் ஒரு வைத்தியரை உடனடியாக
தொடர்பு கொள்ளலாம்
மனநெருக்கடிகளுக்கு உள்ளானவர்களை
காண்பவர்கள் இத் தொலைபேசி சேவையை
பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்.
தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் அனைத்தும்
இரகசியமாக பேணப்படும்
ABAYAM
அபயம்
அபயம் - கல்வி மற்றும் உடல் நலம் சார்ந்த அறக்கட்டளை அமைப்பு

மூளைக்காக வாசிக்கிற புத்தகங்கள்!

முன்னாள் ஐ.ஏ.எஸ் அதிகாரி மற்றும் எழுத்தாளர் வெ. இறையன்பு அவர்கள் மூளைக்கு அறிவூட்ட தேர்ந்தெடுத்த சில புத்தக வாசிப்புக்களை பரிந்துரைக்கிறார்.

அவர் தெரிவித்துள்ளதாவது



"கார்ல் மார்க்ஸ்... இன்று வந்திருக்கிற இளைஞர்களுக்கு நான் இதை அவசியம் படிக்க வேண்டும் என்று சொல்கிறேன். Reflections of a Young Man on the Choice of a Profession என்கிற ஒரு புத்தகத்தை... கார்ல் மார்க்ஸ் சின்ன, மூன்று பக்கம் உள்ள ஒரு கட்டுரை. ஒருவன் எப்படித் தன்னுடைய பணியைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற அற்புதமான கட்டுரையை எழுதியிருப்பார்.



அவர் எழுதிய அந்த தாஸ் காபிடலை (Das Kapital) படிக்க வேண்டுமென்றால் 10 ஆண்டுகள் தேவை. அந்த கம்யூனிஸ்ட் மேனிஃபெஸ்டோவை (The Communist Manifesto) அவரும் எங்கெல்ஸும் பார்த்துப் பார்த்து செதுக்கியிருப்பார்கள்.

அவையெல்லாம் மூளைக்காகப் படிக்க வேண்டியவை. பொருளாதாரம் தொடர்பாக ஹெகல்ஸ் (Hegel) எழுதியதோ, ஆடம் ஸ்மித் (Adam Smith) எழுதியதையோ நீங்கள் படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால், மூளையை நீங்கள் கசக்கித்தான் படிக்க வேண்டியதாக இருக்கும்.

எங்கெல்ஸ் எழுதியிருப்பார் குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்கிற புத்தகத்தை. அவசியம் படியுங்கள். குடும்பம் எப்படி உண்டானது, எப்படி பெண்வழி சமுதாயம் கீழே வீழ்ச்சியடைந்து ஆண்வழி சமுதாயம் அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டதனால் இந்த சமூகம் வீழ்ச்சியடைந்தது என்பதை எழுதியிருப்பார்.

அவர் எழுதுகிறார்: ஒரு முதலாளியிடம் அடிமையாக இருக்கிற ஒருவன் கூட அடிமைப்படுத்த ஓர் உயிர் உண்டு, அது தன் மனைவி என்று நினைக்கிறான் என்று எழுதியிருப்பார். சீனத்திலே ஒரு காலத்திலே ஒரு கணவன் மனைவியைக் கொன்றால் அது தண்டனைக்குரியது அல்ல என்கிற சட்டம் இருந்தது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். 1920-கள் வரை இங்கிலாந்திலே பெண்களுக்கு ஓட்டுரிமை இல்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். இதையெல்லாம் நீங்கள் எங்கெல்ஸைப் படிக்க வேண்டும்.

மனிதக் குரங்கிலிருந்து மனிதன் ஆனதில் உழைப்பின் பங்கு என்று ஒரு சின்ன புத்தகம். அதைப் படித்தால் உழைப்பு எவ்வளவு முக்கியம். இன்று நாம் உழைக்காமல் இருக்கக் கைகளையெல்லாம் விடுதலை பெறுவதற்காக கருவிகளை உருவாக்கி விட்டோம். கைகளில் உழைத்ததனால் தான் மூளை நமக்கு விரிவடைந்தது. ஆனால், இன்று உழைக்காமல் இருப்பதற்கு மூளை பலவற்றை உருவாக்கிவிட்டது. இதுதான் பரிதாபமான ஒன்று.



நீங்கள் எங்கெல்ஸைப் படியுங்கள். நீங்கள்இருத்தலியலைப் பற்றிப் படிக்க வேண்டும் என்றால் சாத்தரை (Jean-Paul Sartre) படியுங்கள். சாத்தருடைய ஒரு கட்டுரையைப் படிப்பதற்கு ஒரு நாள் வேண்டும். அவர் சொல்லுகிறார்:

Existence is different from essence என்கிறார். இன்று இயற்கை சீரழிவதற்குக் காரணமே இதைப் புரிந்து கொள்ளாததனால் தான். ஒரு மரத்தைப் பார்த்த உடனே நாம் அதை மரச் சாமானாக நினைக்கிறோம். ஓர் உயிரைப் பார்த்ததுமே அதை மாமிசமாக நினைக்கிறோம். சாத்தர் சொல்கிறார், அதற்கென்று ஒரு போக்கு இருக்கிறது, அதற்கென்று ஒரு வாழ்க்கை இருக்கிறது. அதனால் நீ சாரத்தை வைத்து அதன் இருத்தலை மதிப்பிடாதே என்று சொல்லுகிறார்.

நாம் பல பேரைப் பார்க்கிறோம். நீங்கள் யார் என்று கேட்டால், நான் பேராசிரியராக இருக்கிறேன், நான் அலுவலராக இருக்கிறேன், நான் அதிகாரியாக இருக்கிறேன். நீங்கள் அதிகாரி மட்டும்தானா? நீங்கள் ஒரு பாசமுள்ள தந்தை இல்லையா? நீங்கள் பொறுப்புள்ள கணவன் இல்லையா? நீங்கள் அறிவுள்ள மகன் இல்லையா? சமூகத்தின் மீது அக்கறை கொண்ட ஒரு சக பயணி அல்லவா? உங்களை ஏன் ஒரு பதவிக்குள் திணித்துக் கொள்கிறீர்கள்? அதைத்தான் சாத்தர் சொன்னார்: "A waiter is not a waiter." அதனால் சாத்தரைப் படியுங்கள்.



காமுவை (Albert Camus) படியுங்கள். நீட்சே (Friedrich Nietzsche) எழுதியிருக்கிறார் Thus Spoke Zarathustra என்று, அதைப் படியுங்கள். இவையெல்லாம் மூளைக்காகப் படிக்க வேண்டியவை.

டார்வினுடைய Origin of Species ஐப் படியுங்கள். டார்வின் எழுதிய அற்புதமான அந்தப் புத்தகம், என்று விற்பனைக்கு வந்ததோ அந்த நாளிலேயே மொத்தப் பிரதியும் அந்தக் காலத்திலேயே விற்றுத் தீர்ந்தது. அப்பேர்ப்பட்ட ஒரு புத்தகம்.



நீங்கள் பிராய்டினுடைய (Sigmund Freud) மனையியலைப் பற்றிப் படியுங்கள். டி. எஸ். எலியட்டினுடைய (T. S. Eliot) கவிதைகளைப் படியுங்கள். டபிள்யூ. பி. யீட்ஸின் (W. B. Yeats) கவிதைகளைப் படியுங்கள். இவையெல்லாம் மூளைக்காகப் படிக்க வேண்டிய புத்தகங்கள். இவற்றையெல்லாம் வாசிக்கிற போது, உங்கள் மூளை இன்னும் புதிய புதிய நரம்பணுக்களை உற்பத்தி செய்யும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.



காலபந்து வீரர்கள் வாசிக்கும் புத்தகங்களும் அவற்றை வாசிப்பதன் மூலம் நாம் கற்றுக்கொள்வதும்!

(நியுயோர்க் டைம்ஸ் பத்திரிகையில் ஜேக்கப் வைட்ஹெட் என்பவரால் எழுதப்பட்ட கட்டுரையை திருத்தங்களுடன் சுருக்கப்பட்டு இங்கே பதிவுசெய்யப்படுகிறது)

கால்பந்து வீரர்களும் வாசிப்பு வழக்கத்திற்கு விதிவிலக்கல்ல. ஷார்ஜா புத்தகக் கண்காட்சியில் பேசிய முகமது சாலா, தனது வெற்றியின் 90 சதவீதத்திற்குப் புத்தகங்களே காரணம் என்று கூறினார். அரபு மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் உளவியல் சார்ந்த நூல்களைக் கொண்ட ஒரு நூலகம் தன்னிடம் இருப்பதாகவும் அவர் விளக்கினார்.

ஸ்பெயின், செல்சி மற்றும் மான்செஸ்டர் யுனைடெட் அணிகளின் முன்னாள் மிட்ஃபீல்டரான ஹீவான் மாதா, ஜப்பானிய



நாவலாசிரியர் ஹருகி முரகாமியின் தீவிர ரசிகர் ஆகும். அந்த ஈர்ப்பு 2023இல் ஜே-லீக் கிளப்பான விசெல் கோபேயில் (Vissel Kobe) இணைவதற்கான அவரது முடிவில் கூட தாக்கத்தை ஏற்படுத்தியது. அதேபோல், 2004-ஆம் ஆண்டு “உலகின் சிறந்த கால்பந்து வீரர் “விருது வழங்கும் விழாவிற்கு தியரி ஹென்றி, பொலிவியா புரட்சியாளர் சே குவேராவின் நாட்குறிப்புகளை வாசித்ததன் உந்துதலால், அவரது உருவம் பொறித்த டி-சர்ட்டை அணிந்து வந்திருந்தார்.

ஜிரோனாவில் (Girona) கடன் அடிப்படையில் விளையாடி வரும் பார்சிலோனாவின் ஓரியோல் ரோமியோ, பியோதர் தஸ்தயேவ்ஸ்கி, ஸ்டீபன் ஸ்விக், என்ரிக் விலா-மடாஸ், மானுவல் வாஸ்க்வெஸ் மொண்டல்பான் மற்றும் ஜோசப் பிளா போன்ற எழுத்தாளர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுப் பேசியுள்ளார். அதே நேரத்தில் அவரது நாட்டுக்காரரும், போர்ன்மவுத் அணியின் தலைமைப் பயிற்சியாளருமான அந்தோனி இராவோலா, மேரி ஷெல்லியின் ஃபிராங்கண்ஸ்டைன்' (Frankenstein) நாவல் மீதான தனது காதலை பெப்ரவரி மாதம் (2025) "தி அத்லெடிக்" (The Athletic) இதழிடம் பகிர்ந்துகொண்டார்.

மற்ற அனைவரையும் போலவே விளையாட்டு வீரர்களும் யதார்த்தத்திலிருந்து விடுபடவும், அறிவைப் பெறவும், மன அமைதிக்காகவும் தான் வாசிக்கிறார்கள். ஆனால் வேறு சில காரணிகளும் இங்கு செயல்படுகின்றன. பிரீமியர் லீக் கால்பந்து வீரர்களிடையே, ஊக்கமளிக்கும் தன்னம்பிக்கை நூல்கள் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. இவர்களில் மிகவும் பொதுவான வகை புத்தகங்கள், சுய முன்னேற்றம் மற்றும் உளவியலின் சங்கமத்தில் அமைந்தவையாகும்.

கால்பந்து வீரர்களிடையே மிகவும் அதிகமாக வாசிக்கப்பட்ட ஒன்று டிம் எஸ். குரோவரின் 'ரிலென்ட்லெஸ்' (Relentless). டிம் எஸ். குரோவர், கூடைப்பந்து வீரர்களான கோபி பிரையன்ட், மைக்கேல் ஜோர்டான் மற்றும் டுவைன் வேட் போன்றவர்களின் முன்னாள் பயிற்சியாளர் ஆவார். அதன் அட்டைப்படத்திலேயே அதன் மையச் செய்தி பொறிக்கப்பட்டுள்ளது: "நல்லதிலிருந்து, சிறந்த நிலைக்குத் அங்கிருந்து தடுக்க முடியாத நிலைக்கு (From Good> to Great> to Unstoppable)."

"ஒவ்வொரு முறை நான் அதை வாசிக்கும்போதும், அதை உன்னிப்பாக ஆராய்ந்து, குறிப்பிட்ட வரிகளை ஒரு குறிப்பிட்ட நிறத்தில் அடிக்கோடிட்டுக் காட்டுவேன்," என்று மார்கஸ் ராஷ்ஃபோர்ட் 2021இல் "தி கார்டியன்" நாளிதழிடம் கூறினார். ராஷ்ஃபோர்ட் மட்டுமல்ல. 2015இல் செல்சியை பிரீமியர் லீக் பட்டத்திற்கு அழைத்துச் சென்ற பிறகு, ஜான் டெர்ரி விடுமுறையின் போது இந்தப் புத்தகத்தை வாசிப்பதாக இன்ஸ்டாகிராமில் பதிவிட்டிருந்தார். மேலும் 2018 உலகக் கோப்பையின் போது இங்கிலாந்து அணி வீரர்களிடையே 'ரிலென்ட்லெஸ்' கைமாறிச் சென்றது.

வெளியாகி பன்னிரண்டு ஆண்டுகள் கடந்த பிறகும், அகாடமி வீரர்கள் மத்தியில் இன்றும் மிகவும் பிரபலமான புத்தகங்களில் ஒன்றாக இது திகழ்கிறது.

சிக்கல் என்னவென்றால், ‘ரிலென்ட்லெஸ்’ ஒரு மேலோட்டமான அறிவியல் தன்மையையும் வரம்புமீறிய மேட்டிமைத்தனத்தையும் ஒன்றிணைக்கும் ஒரு மோசமான புத்தகம் மட்டுமல்ல. சில சமயங்களில் ஆபத்தான ஒன்றாகவும் மாறுகிறது.

குரோவர் ஒட்டுமொத்த மனிதகுலத்தையும் (விளையாட்டு வீரர்களை மட்டுமல்ல) மூன்று வகைகளாகப் பிரிக்கிறார். கூலர்ஸ் (Coolers), குளோசர்ஸ் (Closers), மற்றும் கிளீனர்ஸ் (Cleaners). ஒவ்வொரு நபரும் ஒரு ‘கிளீனராக’ மாறவே முயற்சி செய்ய வேண்டும். “கற்பனை செய்யக்கூடிய மிகவும் தீவிரமான மற்றும் குறிக்கோள் கொண்ட போட்டியாளர்… வெற்றிக்கான தீராத போதை உங்கள் ஒட்டுமொத்த வாழ்க்கையையும் தீர்மானிக்கிறது”. தனது அதிகாரப் படிநிலையின் உச்சியிலிருந்து பார்க்கும் குரோவர், குளோசர்களையும் கூலர்களையும் — அதாவது முழுமையான தகுதி இல்லாதவர்களை — மிகவும் தாழ்வாகப் பார்க்கிறார்.

வீரர்களைப் பொறுத்தவரை, ஒரு “கிளீனராக“ மாற வேண்டும் என்ற எண்ணம் ஏன் ஒரு போதையைத் தருகிறது என்பது தெளிவாகப் புரிகிறது.

“இந்த அணியில் நிறைய கிளீனர்கள் உள்ளனர்,” என்று 2018 உலகக் கோப்பையின் போது இங்கிலாந்தின் முன்னாள் மிட்ஃபீல்டர் ஃபேபியன் டெல்ஃப் கூறினார். மேலும் “தங்களைத் தாங்களே மேம்படுத்திக் கொள்ள விரும்பும் பெரிய கிளப் வீரர்கள் பலர் உள்ளனர். சிலர் ரிலென்ட்லெஸ் வாசித்து வருகிறார்கள். அது என் மனதை போர்க்களத்திற்குள் நுழைவதற்கு தயார்படுத்துகிறது” எனவும் தெரிவித்துள்ளார்.

“போர்க்களத்திற்குச் செல்வது” போன்ற உணர்வு ஏற்படுவதில் ஆச்சரியமில்லை. குரோவர் புத்தகம் முழுவதும் இரக்கமற்ற, வேட்டையாடும் மனநிலையை ஒருவிதக் குளிர்ந்த நடையுடன் வலியுறுத்துகிறார். உங்களுக்கு நீங்கள் மட்டுமே முக்கியம். அவருக்கு மிகவும் பிடித்த வாசகம்: “முடிந்தது. அடுத்தது (Done. Next).”

குரோவர் 13 முக்கியமான அம்சங்களை வழங்குகிறார். அவற்றில் இரண்டு: “#1. நல்லவனாக இருக்க மறுக்கும் ஒரு இருண்ட பக்கம் உங்களுக்குள் இருக்கிறது. #1. மற்றவர்கள் உங்களை விரும்புவதை விட, உங்களைக் கண்டு பயப்படுவதையே நீங்கள் விரும்புவீர்கள்”. இது எழுத்துப் பிழை அல்ல.

ஒவ்வொரு ஆலோசனையும் சமமான முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், எல்லாவற்றையும் “#1” என்றே குரோவர் லேபிளிடுகிறார். இது சமூக ஊடக யுகத்திற்கான ஒரு புத்தகம். எளிதில் உள்வாங்கிக் கொள்ளக்கூடியதாகவும், மேற்கோள் காட்டக்கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேற்கோள்களை அடிக்கோடிட்டு, தட்டச்சு செய்து, 24 மணிநேர இன்ஸ்டாகிராம் ஸ்டோரியாகப் பகிர ஏதுவானது (அநேகமாக வெயில் கால பயிற்சிப் புகைப்படத்திற்குப் பக்கத்தில்). “மற்றவர்கள் உங்களிடமிருந்து எதிர்பார்ப்பதை விட எப்போதும் உங்களிடமிருந்து அதிகமாகக் கோருங்கள்”. பதிவிடு. முடிந்தது. அடுத்தது.

ஆனால் குரோவர் விமர்சிக்கப்படும் போதெல்லாம் அவரிடம் எப்போதும் ஒரு பதில் தயாராக இருக்கும்: “நீங்கள் ஒரு புதிய இடத்திற்குச் செல்ல விரும்பினால், பழைய தேய்ந்துபோன வரைபடத்தை தூக்கி எறிந்துவிட்டு, முட்டுச்சந்திற்குச் செல்லும் அதே பாதையில் பயணிப்பதை நிறுத்த வேண்டும்”.

நீங்கள் ஒரு கிளீனர் இல்லை. உங்களால் புரிந்து கொள்ள முடியாது. ஒருவேளை அந்த வெற்றி உங்களுக்குப் போதுமான அளவு தீவிரமாகத் தேவைப்படவில்லையோ என்னவோ. இதே போன்ற கருப்பொருள்களைக் கொண்ட மற்றொரு புத்தகமான போரீன் ‘ஒரு இளம் விளையாட்டு வீரருக்கு கடிதங்கள்’ (Letters to a Young Athlete) நூலை நான் ஒருவித தயக்கத்துடனேயே படிக்கத் தொடங்கினேன். லெய்செஸ்டர் சிட்டி மேலாளர் ரூட் வான் நிஸ்டல்ராய் இதன் தீவிர ரசிகர். பி.எஸ்.வி கிளப்பில் இருந்தபோது அன்வர் எல் காசி போன்ற வீரர்களுக்கு இதை அவர் பரிந்துரைத்தார். “அவர் எனக்கு இந்தப் புத்தகத்தைக் கொடுத்து, ‘இதைக் கேள், இதை வாசித்துவிட்டுப் பிறகு என்னிடம் வா’ என்று சொன்னார்,” என எல் காசி கடந்த ஜனவரியில் (2025) ‘தி அத்லெடிக்’கிடம் தெரிவித்தார்.

போஷ் ஒரு சிறந்த விவரிப்பாளர். என்.பி.ஏ ஹால் ஆ∴ப் ∴பேம் (NBA Hall of Fame) உறுப்பினரான அவர், மியாமி ஹீட் அணியுடன் இரண்டு என்.பி.ஏ இறுதிப் போட்டிகளை வென்று உச்சத்தை எட்டினார். ஆரம்பத்திலிருந்தே, ஒரு விளையாட்டு வீரராக எழுதும் போஷ், குரோவரிடம் இல்லாத ஒரு பச்சாதாபத்தை வெளிப்படுத்துகிறார். "உங்கள் தலையில் மற்றொரு குரல் ஒலிப்பதை நீங்கள் ஒருவேளை கடைசியாகத்தான் விரும்புவீர்கள்," என்று அவர் தொடங்குகிறார்.

இரண்டு புத்தகங்களுமே ஒரே மாதிரியான கருப்பொருள்களை நோக்கியே பயணிக்கின்றன. திறமையை விட கடின உழைப்பு மற்றும் மன உறுதியின் முக்கியத்துவம். ஆனால் போஷ், தியாகங்கள் செய்யப்பட வேண்டும் என்று வெறும் கட்டளையிடுவதற்குப் பதிலாக, அந்தத் தியாகங்களைச் செய்வதற்குத் தேவையான உள்நோக்கத்தை இன்னும் ஆழமாக ஆராய்கிறார். அதிகப்படியான இலக்கியக் கோட்பாடுகளுக்குள் செல்லாமல் (எனது முதுகலை பட்டப்படிப்பின் போது ∴ப்ரெட்ரிக் ஜேம்சன் கருத்துக்களில் எனக்கு அதீத ஈர்ப்பு இருந்தது), போஷ் விளையாட்டு வீரர்களிடம் வெற்றுப் பூச்சுகளை அகற்றிவிட்டு உண்மையான நிலையை, அதாவது அவர்களின் நோக்கத்தை ('why') கண்டறியுமாறு கேட்கிறார்.

அதில், அவர் சில சமயங்களில் வழக்கமாக எதிர்பார்க்கப்படும் குறுகிய ஒற்றைப் பரிமாண சிந்தனைக்கு மாறாகவும் பயணிக்கிறார். அது வெறும் உத்தரவுகளை வழங்குவதை விட, கேள்விகளை எழுப்புகிறத் அதுவே ரிலென்ட்லெஸ் நூலை விட இதை வாசிப்பதற்குச் சற்றுக் கடினமானதாகவும், ஆனால் மிகச் சிறந்த ஒன்றாகவும் ஆக்குகிறது.

போரீன் வாழ்க்கைப் பயணத்தை அடிப்படையாகக் கொண்ட அவரது பதிவை வாசிக்கும்போது, கால்பந்து வீரர்கள் ஏன் குறிப்பாக இந்த சுய முன்னேற்ற/உளவியல் புத்தகங்களை விரும்பக்கூடும் என்பது தெளிவாகிறது.

இழப்புகள் அதிகம், அழுத்தத்தைத் தவிர்க்கவே முடியாது. இங்குதான் பேராசிரியர் ஸ்டீவ் பீட்டர்ஸின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. உயர்மட்ட விளையாட்டுகளில் மிகவும் மதிக்கப்படும் உளவியலாளர்களில் ஒருவர் இவர். அவரது நூலான 'சிம்பன்சி முரண்பாடு' (The Chimp Paradox), பல கால்பந்து வீரர்களிடையே பிரபலமானது.

நமது மூளையின் வெவ்வேறு பகுதிகள் வெவ்வேறு நோக்கங்களைக் கொண்ட வெவ்வேறு ஆளுமைகளைக் கொண்டுள்ளன என்ற மையக் கோட்பாட்டை இது அடிப்படையாகக் கொண்டது. முன்பக்கப் பகுதி (மனிதன் - human), லிம்பிக் பகுதி (சிம்பன்சி - chimp), மற்றும் பேரியட்டல் பகுதி (கணினி - computer). "நடைமுறையில், உங்கள் தலையில் இரண்டு உயிரினங்கள் உள்ளன," என்று மனிதன் மற்றும் சிம்பன்சி பற்றிக் குறிப்பிடும் பீட்டர்ஸ் கூறுகிறார். இதில் எது மேலோங்கி நிற்கிறதோ அதைக் கொண்டு கம்ப்யூட்டர் இயங்குகிறது. "சிம்பன்சி என்பது நாம் அனைவரும் கொண்டிருக்கும் உணர்ச்சி இயந்திரம். இது நம்மிடமிருந்து சுயமாகச் சிந்தித்து முடிவுகளை எடுக்கக்கூடியது. இது மிகவும் ஆக்கபூர்வமான அல்லது மிகவும் அழிவுகரமான உணர்ச்சி எண்ணங்களையும் உணர்வுகளையும் வழங்குகிறது. இது நல்லதும் அல்ல கெட்டதும் அல்ல, இது ஒரு சிம்பன்சி. 'தி சிம்ப் பாரடாக்ஸ்' என்னவென்றால், அது உங்கள் சிறந்த நண்பனாகவும் இருக்கலாம், மோசமான எதிரியாகவும் இருக்கலாம்".

கால்பந்தில் இதன் பலன்கள் வெளிப்படையாகத் தெரிகின்றன. இது உள்ளுணர்வு மற்றும் ஆக்ரோஷத்தின் மீது கட்டமைக்கப்பட்ட ஒரு விளையாட்டு. ஆனால் முக்கியமாக, அது கட்டுப்படுத்தப்பட்ட ஆக்ரோஷமாக இருக்க வேண்டும்.

அந்த சிம்பன்சியை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதை விளக்க பீட்டர்ஸின் புத்தகம் முயற்சிக்கிறது. புத்தகத்தில், அவர் ஒரு மேடை பியானோ கலைஞரின் உதாரணத்தைப் பயன்படுத்துகிறார். ஆனால் பெனால்டி ஷூட்-அவுட் முறையில் இதை சிந்திப்பது இன்னும் பயனுள்ளதாக இருக்கும். 2014ஆம் ஆண்டில் இங்கிலாந்து அணியின் பெனால்டி பயத்தை உளவியல் ரீதியாகக் கையாள எ.ஃ.ப்.ஏ (FA) மூலமாக இவர் கொண்டுவரப்பட்டார்.

ராயல் ஆல்பர்ட் ஹாலில் நடக்கும் இசை நிகழ்ச்சி அல்லது மரக்கானா மைதானத்தில் எடுக்கப்படும் பெனால்டி போன்ற அதிக அழுத்தம் நிறைந்த சூழலில், சிம்பன்சி இயல்பான "எதிர்த்து நில் அல்லது தப்பியோடிவிடு" (fight or flight) என்ற உணர்வை எதிர்கொள்கிறது. சிம்பன்சியின் பயங்களைக் கையாள முடியும். ஒன்று அதை வெளிப்படுத்துவதன் மூலம் (உணர்ச்சியை விடுவித்தல்), அல்லது அடைத்து வைப்பதன் மூலம் (சிம்பன்சியுடன் தர்க்கரீதியாகப் பேசுதல்) அல்லது வாழைப்பழங்கள் வழங்குவதன் மூலம் (சிம்பன்சி கவனச்சிதறலாகவோ அல்லது வெகுமதியாகவோ விரும்புபவை).

ஒரு ஷூட்-அவுட்டைப் பொறுத்தவரை, சிம்பன்சியை அமைதிப்படுத்துவது ஆலோசனையாக இருக்கலாம். பெனால்டி பலமுறை பயிற்சி செய்யப்பட்டுள்ளது என்று தர்க்கம் செய்வது. மேலும் அதற்கு ஒரு வாழைப்பழத்தைக் கொடுப்பது போல, அந்த செயல்முறையின் நுணுக்கங்களில் சிம்பன்சியின் கவனத்தைத் திசைதிருப்பும் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒரு வழக்கத்திற்குள் இறங்குவது.

அதன்பின் மீண்டும் மீண்டும் செய்யக்கூடிய அந்தச் செயலைச் செயல்படுத்த கம்ப்யூட்டர் பொறுப்பேற்க முடியும். சுருக்கமாக, மாறுபட்ட சூழ்நிலைகளில் ஒரே மாதிரியான விளைவுகளை அடைய பீட்டர்ஸ் ஒரு விளையாட்டு வீரரைத் தயார்படுத்துகிறார்.

தி சிம்ப் பாரடாக்ஸ் என்பது அதிக அழுத்தம் நிறைந்த தருணங்களில் கட்டுப்பாட்டைப் பேணுவதைப் பற்றியது. விளையாட்டு வீரர்கள் தங்களின் தொழில் வாழ்க்கைப் பாதையைக் கட்டுப்படுத்த முழுமையான திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று போஃம் விரும்புகிறார். குரோவர் கூட ரிலென்ட்லெஸ் நூலில் அதை வெளிப்படையாகக் கூறுகிறார். “ஒரு கிளீனர் என்பது கட்டுப்பாட்டைப் பற்றியது”.

இதனை ஒரு கவிதையுடன் முடிப்பதை மன்னிக்கலாம். வில்லியம் எர்னஸ்ட் ஹென்லியின் ‘இன்விக்டஸ்’ (Invictus) நன்கு அறியப்பட்டது, அடிக்கடி மேற்கோள் காட்டப்படுவது மற்றும் விளையாட்டுச் சூழலுக்குப் புதியதல்ல ஆனால் உரைநடைக்கு அருகில் அதை வைக்கும் போதுதான் அது ஏன் இவ்வளவு ஆழமாக எதிரொலிக்கிறது என்பதை உணர முடிகிறது. அதன் இறுதிக் கோடுகள் கால்பந்து வீரர்களின் வாசிப்பிற்குப் பின்னால் உள்ள சித்தாந்தத்தைச் சுருக்கமாகக் கூறுகின்றன:

“நுழைவாயில் எவ்வளவு குறுகலாக இருந்தாலும் சரி,
விதிமுறைகள் எவ்வளவு தண்டனைகள் நிறைந்ததாக இருந்தாலும் சரி,
என் விதியின் எஜமானன் நானே
என் ஆன்மாவின் தலைவனும் நானே.”